விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 04 வியாழக்கிழமை (19.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 213

ராம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

கிழக்குத் தேர்தலில் தனித்துப் போட்டி

முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து மரச்சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

ஆசன ஒதுக்கீடு குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளிக்காமையை அடுத்து ஜனாதிபதியின் இணக்கத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்குத் தேர்தலில் தனியாக களமிறங்கத் தீர்மானித்துள்ளது.

கிழக்குத் தேர்தலில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட இதற்கு முன்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்தது.

எனினும் கட்சியின் இந்த முடிவுக்கு கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு ஏற்பட்டது. இதனால் (20ஆம் பக்கம் பார்க்க)

நீதிமன்றங்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல்

மன்னாரில் பதற்றம்

(மன்னார்)

மன்னார் நீதவான் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் என்பவற்றின் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார், கோந்தப்பிட்டி பிரதேச மீனவர்கள் தொடர்பாக நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து நேற்று நண்பகல் முதல் மன்னார் நகர் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவானால் 16 மீனவர்களை கைது செய்யுமாறு விடுக்கப்பட்ட உத்தரவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றிற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்ட வேளை, ஏற்பட்ட பிரச்சினையால் அங்கு பதற்ற நிலை உருவாகியது.

மேலும் ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதலில் காயமடைந்த சிலர் (20ஆம் பக்கம் பார்க்க)

பொலிஸ் பாதுகாப்புடன் கவனயீர்ப்புப் போராட்டம்

த.தே.ம.முன்னணியின் ஏற்பாட்டில் நெல்லியடியில் நேற்று நடந்தது

(கரவெட்டி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நெல்லியடியில் நேற்று இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பெருமளவான பொலிஸார் பாதுகாப்பு வழங்க, இவ் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (20ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு வேட்பாளருக்கு அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் போட்டியிடவிருந்த இரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான வேட்பு மனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட இருந்ததாகவும், வேட்பாளர்கள் திடீரென வாபஸ் பெற்றுக் கொண்டதனால் மீண்டும் வேட்பாளர் பட்டியலில் திருத்தங்களை செய்ய நேரிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் (20ஆம் பக்கம் பார்க்க)

பறந்தது புலிக்கொடி மிரண்டனர் மக்கள்!

வேடிக்கை பார்த்தது பாதுகாப்புத் தரப்பு

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி நகரப் பகுதியில் நேற்றுக்காலை 11 மணிக்கு இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் திடீரென புலிக்கொடி பறந்ததனால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் அரசியல் கைதியான நிமலரூபனின் படுகொலையைக் கண்டித்தும் நில அபகரிப்புக்கு எதிராகவும் நேற்று நெல்லியடியில் கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

இப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரெனப் புலிக்கொடியுடன் இரண்டு மோட்டார் சைக்கிளில்வந்த முகமூடி அணிந்த 4 பேர் நெல்லியடி பஸ்தரிப்பு இத்தை இரண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

திசைகாட்டி

சர்வதேச வலைப்பின்னலில் தன்னை சட்டரீதியாக பிணைத்துக் கொண்டது

யாழ். குடாநாட்டை தலைமையகமாகக் கொண்ட முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான "திசைகாட்டி" சர்வதேச ரீதியாக விசா ஆலோசனைத் துறையிலுள்ள 4 முக்கிய நிறுவனங்களுடன் தன்னை பிணைத்துக் கொண்டது என்பதை மிக்க மகிழ்வோடு அறியத் தருகின்றோம்.

எமது புதிய ஆலோசனைகளாவன...

★ நியூசிலாந்து குடும்பவிசா / Student visa
★ அவுஸ்திரேலியா குடும்பவிசா / Student visa
★ மலேசியா குடும்பவிசா / Student visa

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)

முன்மாதிரியான வீசா ஆலோசனை நிலையம்

தலைமைக் காரியாலயம்:
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. : 021 221 9016

(C-565)

வடமராட்சியில் நேற்று சோதனைக் கெடுபிடி

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடிப் பிரதேசத்தில் நேற்றுக்காலை இராணுவப்பிரசன்னம் அதிகமாக காணப்பட்டதால் மக்கள் அச்சத்தில் காணப்பட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றுக்காலை 11 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்த வேளை இராணுவத்தினர் வல்லைச் சந்தியில் வைத்து வழமைக்கு மாறாக பேருந்தில் வந்த மக்களை சோதனை செய்ததோடு ஆர்ப்பாட்டம் நடந்த (20ஆம் பக்கம் பார்க்க)

இடையூறு இன்றி இறுதிச் சடங்கு

சட்டமா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

வவுனியா நெலுக்குளத்தைச் சேர்ந்த கணேசன் நிமலரூபன் என்ற கைதியின் மரணச்சடங்கானது தேசிய பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்படுத்தாத வகையில் அமைதியாக நடத்தப்படுமென்ற உறுதிமொழியை சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

நிமலரூபனின் பிறேத பரிசோதனை (20ஆம் பக்கம் பார்க்க)

'சரியான முடிபு' சம்பந்தன் வரவேற்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என முஸ்லிம் காங்கிரஸ் எடுத்திருக்கும் முடிபு மிகவும் வரவேற்கத்தக்கது என (20ஆம் பக்கம் பார்க்க)

நிமலரூபனின் சடலம் தீர்ப்பு 20ஆம் திகதி

(கொழும்பு)

பொலிஸாரின் தாக்குதலினால் உயிரிழந்த கணேசன் நிமலரூபனின் சடலம் தொடர்பில் அவருடைய பெற்றோர்களினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று கொழும்பு உச்ச நீதிமன்றில் நடைபெற்றது.

இதன்போது குறித்த மனு மீதான தீர்ப்பு (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நனனெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஆர்ப்பாட்டத்தை குழப்புவதற்கு எடுத்த முயற்சியே புலிக் கொடி!

சிறிதரன் எம்.பி குற்றச்சாட்டு



(நெல்லியடி)

நெல்லியடியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தின் போது இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் புலிக் கொடிகளை ஏந்திச் சென்றதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நிமலரூபனின் கொலையைக் கண்டித்தும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் தமிழர்களின் நில ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நெல்லியடியில் நேற்று முற்பகல் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பில் சிறிதரன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகப் போராட்டத்தைக் குழப்புவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலையே இது. எனினும், நாங்கள் இதற்குப் பயப்படப் போவதில்லை.

நாம் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோம். இன்றைய ஆர்ப்பாட்டத்தின் போது புலனாய்வுப் பிரிவினரே மோட்டார் சைக்கிள்களில் புலிக் கொடி ஏந்தி வந்தனர்.

அவர்கள் ஆர்ப்பாட்டத்தைக் குழப்ப நினைத்தார்கள். எனினும் அவர்களின் முயற்சி தோல்வியடைந்தது. மோட்டார் சைக்கிளில் வந்த அவர்கள் முதியவர் ஒருவர் மீது மோதிவிட்டுச் சென்றனர் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் மே தின ஊர்வலத்தின்போது புலிக் கொடி யுடனும், தமிழீழப் படம் பதித்த ரீசேட்டுடனும் இளைஞர்கள் சென்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

ஹெரோயின் விற்றவருக்கு மரணதண்டனை தீர்ப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதியில் ஹெரோயின் விற்பனை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த பெண்ணொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

குறித்த பெண் 2001 ஆம் ஆண்டு வெள்ளவத்தை பகுதியில் ஹெரோயின் விற்பனை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

இவ்வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட இப் பெண்ணுக்கு மரண தண்டனை விதித்ததுடன் 30 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் 12 மாதத் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார். (எ-11)

ரங்காவின் பிரஜைகள் முன்னணி மு.காவுடன் இணைய விருப்பம்

(கொழும்பு)

நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவை செயலாளர் நாயகமாகக் கொண்ட பிரஜைகள் முன்னணி எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கட்சித் தலைமையகமான தருஸ்ஸலாமில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுவதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளார் எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தகவல்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்றுப் புதன்கிழமை மாலை கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த அஸாத் சாலியும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

எனினும், பிரஜைகள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உத்தியோக பூர்வமாக எதுவும் அறிவிக்கவில்லை என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

கொள்ளையில் ஈடுபட்டவர் அடையாளம் காட்டப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வீட்டினை உடைத்து கொள்ளையடித்த வர்ர வீட்டு உரிமையாளர் நீதிமன்றில் அடையாளம் காட்டியமையால் கொள்ளையனுக்கு யாழ்.நீதிமன்று விளக்கமறியல் விதித்துள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் கடந்த மாதம் 29-ம் திகதியன்று கோப்பாயில் இடம் பெற்றுள்ளது.

இத்திருட்டில் வீட்டில், இருந்தவர்களை ஆயுதங்களினைக் காட்டி அச்சுறுத்தி 30 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் தங்க நகைகள் என்பன திருடப்பட்டன.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதனையடுத்து கொள்ளையோடு சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று குறித்த வழக்கு அடையாள அணி வகுப்புக்காக யாழ்.நீதிமன்ற உத்தியோகப்பற்றற்ற நீதவான் க.கேசவன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. குறித்த அடையாள அணி வகுப்பின் போது தமது வீட்டினை உடைத்து ஆயுதங்களை காட்டி அச்சுறுத்தி பல லட்சம் ரூபாய் பெறுமதியான நகை, பணம் என்பவற்றை கொள்ளையடித்தவரை மிகச்சரியாக இனங் காட்டியமையால் குறித்த நபரை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தியோகப்பற்றற்ற நீதவான் க.கேசவன் உத்தரவிட்டார். (எ-4)

இதுபோல் மக்கள் விரோத அரசு உருவான வரலாறு இல்லை!

விக்கிரமபாகு கருணாரட்ண சுட்டிக்காட்டு

இலங்கையில் மக்கள் விரோத அரசாங்கம் வரலாற்றில் ஒருபோதும் உருவானதில்லை என விக்கிரமபாகு கருணாரட்ண குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பல அபிவிருத்திகள் இடம்பெறுவதாக அரசாங்கம் தம்பட்டம் அடித்தாலும் மக்களுக்கான பயனுள்ள அபிவிருத்திப் பணிகள் எதுவும் இடம்பெறுவதில்லை என்றும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியை அனுபவிப்போர் இரண்டு சதவீதத்திற்கும் குறைவான மக்களே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிர்க் கட்சி ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல், மோசடி, அடக்குமுறை மூலம் பல திட்டங்களை முன்னெடுத்து எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை வெற்றி கொள்ள அரசாங்கம் முனைவதாகவும் அதற்கு இடமளிக்க முடியாதெனவும் குறிப்பிட்டார்.

உண்மையில் இந்த அரசாங்கம் ஏகாதிபத்திய அரசாங்கம் என்று சொல்லும் நிலையில் கூட இல்லை. உலகில் ஏகாதிபத்திய அரசாங்கமாக இருந்தாலும் அதற்கு அதிகாரம் செயற்பாடுகள் குறித்து வரையறை நோக்கம் இருக்கும்.

இந்தவகையில் இந்த அரசாங்கத்திடம் அவ்வாறான திட்டமும் இல்லை. ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொன்றைச் சொல்லும் இந்த அரசுக்கு அதனைச் செயற்படுத்த முடியாத பைத்தியகார அரசாக மாறியுள்ளது.

அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக நாம் இந்தப் போராட்டத்தை நிறுத்தாமல் நடத்திச் செல்வோம். இந்தப் போராட்டத்திற்காக அன்று ஒத்துழைப்பு வழங்கிய வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண ஆகியோர் இருப்பது எங்கே? இந்த வகுப்புப் போராட்டத்தை நீங்கள் முன்னெடுத்திருந்தால் இன்று நாம் ஏன் மேடையில் இருந்து கேள்வி கேட்கின்றோம். உடனடியாக அரசில் இருந்து விலகி இந்த வகுப்புப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம். (எ-11)

செலான் வங்கித் தலைவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

செலான் வங்கியின் தலைவரும், முன்னாள் சட்டமா அதிபருமான மொஹான் பீரிஸை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டே நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செலான் வங்கியின் சட்டப் பிரிவின் பொறுப்பாளர் ரோஹண மொஹந்திரம் மற்றும் தலைவர் மொஹான் பீரிஸ் ஆகிய இருவரையுமே ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு 22695 அமெரிக்க டொலர் மற்றும் ஒன்றரை லட்ச ரூபாய் ஆகிய வற்றை வைப்புச் செய்த வங்கி வாடிக்கையாளர் ஒருவர் செலான் வங்கிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வைப்புச் செய்யப்பட்ட பணம் தொடர்பான ஆவணங்கள் இருக்கின்ற போதிலும், வங்கியில் பணம் வைப்புச் செய்யப்படவில்லை என வங்கி அதிகாரிகள் அறிவித்துள்ளதாக குறித்த வாடிக்கையாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாவலவைச் சேர்ந்த ஷிரானி அனோமா என்பவரே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வங்கித் தகவல்கள் ஆறு வருடங்களுக்கு ஒருதடவை அழிக்கப்படும் என வங்கியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

எனினும் நூறு வருடங்கள் கடந்தாலும் தகவல்களை பேண வேண்டியது வங்கியின் கடமையாகும் என்று நீதிவான் கருத்து தெரிவித்துள்ளார். நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-11)

ஸ்கந்தபுரத்தில் அதிகாலை திருட்டு

(இராமநாதபுரம்)

ஸ்கந்தபுரம் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள பலசரக்கு கடையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடையை உடைத்து திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

8 இலட்சம் ரூபாய் பணமும் 15 பண்டில் சிகரெட் பெட்டியும் களவாடப்பட்டுள்ளது.

அதிகாலை கடையை திறக்கச் சென்ற போதே திருட்டு சம்பவம் இடம்பெற்றது தெரியவந்தது.

சம்பவம் தொடர்பாக அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகிறார்கள். (எ-269)

பாவோதலில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் சிவகோணேசன் சிவாம்சன் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியில் பாவோதலில் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.

அத்துடன் இவர் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என்பவற்றிலும் முதலாம் இடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org

இன்று ஒரு தகவல்

தன் முனைப்பு

ஒரு காட்டிலே நரியொன்று இருந்தது.

ஒருநாள் அதிகாலை வேளையில்... அது தன் இருப்பிடத்தை விட்டு வெளியில் வந்தது. சிறிது தூரம் அது நடக்க ஆரம்பித்தது. அவ் வேளையிலே சூரியன் உதிக்க ஆரம்பித்தது. அப்போதுதான் அது தன்னுடைய நிழலை கவனிக்க ஆரம்பித்தது. அதனது நிழல் மிகவும் நீளமாகத் தெரிந்தது.

காலை வேளையிலே நிழல் அப்படித்தான் இருக்கும்? ஆனால்... அந்த நரிக்கு அந்த விடயம் தெரியாது. அது தனது நீண்ட பெரிய நிழலைப் பார்த்து ஆச்சரியப்பட்டது.

''ஆகா!... நாம் இவ்வளவு நீளமாகப் பெரிதாக இருக்கிறோம். என்னுடைய காலைச் சாப்பாட்டிற்கு ஒரு யானை அல்லது ஒட்டகம் கிடைத்தால்தான் சமாளிக்கலாம்''என்று முடிவு பண்ணியது.

உடனே அந்த வீராப்புடன் யானை அல்லது ஒட்டகம் கிடைக்கும் என அலைந்தது. மத்தியானமும் ஆனது. பசிக்களை ஒருபக்கம்,அலைச்சல் மறுபக்கம். இப்போது தன்னுடைய நிழலை பார்த்தது.

மத்தியான நிழல் எப்படி இருக்கும்? அது மிகவும் குறுகிப் போய் தெரிந்தது.

உடனே அந்த நரி என்ன நினைத்தது தெரியுமா? ''காலையிலே உணவு சாப்பிடாதபடியால்தான் நமது உடம்பு இப்படி இளைத்துப் போய்விட்டது''என நினைத்து கவலைப்பட்டது. சற்று நேரம் சென்ற பின்னர் மறுபடியும் தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது இன்னமும் குறுகிப் போய் காலடியிலேயே வந்து விட்டது... அதற்குப் பயமாக இருந்தது.

ஐயையோ... இன்னும் சிறிது நேரத்திலே நான் இறந்து விடுவேன்போல் இருக்கிறது என நினைத்தது. இப்போது என்ன செய்வது? இச் சமயத்திலே ஒரு எறும்பு கிடைத்தால் கூட போதும். அதை எனது காலை ஆகாரமாக நினைத்து சாப்பிடலாம் என நினைத்தது.

நம்முடைய நிழல்கூட நம்மளை மாதிரியேதான். அடிக்கடி மாறிக் கொண்டுதான் இருக்கிறது. அது எப்போதும் ஒரேமாதிரி இருப்பதில்லை.

ஒரு காரியத்தை வெற்றிகரமாக நல்ல விதமாக செய்து முடிக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சமயத்திலே ஒருவித நுட்பமான தற்பெருமை நமக்குள்ளே உண்டாகி விடும். இது இயற்கையானது. அதனால் இதுமேல் பற்று வைக்கக்கூடாது. அப்படி பற்று வைத்தால், அது நிரந்தர விருந்தாளியாக நம்மில் தங்கி இடம்பிடித்துக் கொள்ளும்.

நமது நிழல் நாம் நடக்கும் போது பின்னால் வரும். நிழல் யாருக்கும் எந்தப் பிரச்சினையையும் செய்வதில்லை.

ஆனால், அந்த நிழலைக் கண்டு நாம் பயப்பட ஆரம்பித்து விட்டால், எவற்றிலும் வெற்றி காண முடியாது.

நாம் நிழல் அல்ல... நம்மிடமுள்ள தன்முனைப்பு கொண்ட ஒரு நிழல்.

நமது நிழலையும் நமக்குச் சமமாகப் பார்க்கிறோம்... அங்கேதான் சிக்கலே ஆரம்பிக்கிறது.

நாம் நடந்து போய்க் கொண்டிருக்கும்போது, எமது நிழல் கீழே விழும். ஒருவர் அதன்மேல் காலை வைத்து நடந்து போகிறார். உடனே அவரிடம் நிழலை மிதித்ததற்கு சண்டை போடுவதா...

நமது நிழல் மேலே நடக்கிறவர் எம்மைக் காயப்படுத்துவதில்லை.

நிழலின் நிழலாகி விடாதீர்கள். அது இயற்கை. நிழலை உங்கள் முன்னால் வைக்க வேண்டாம். அது உங்களின் பின்னால் இருக்கட்டும்.

நீங்கள் நீங்களாகவே இருங்கள்– இதுதான் ஓஷோ சொல்லும் கருத்து.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைகளின் புதிய கட்டடங்கள் இன்றும் நாளை மறுதினமும் எதிர்வரும் 22 ஆம் திகதியும்திறந்துவைக்கப்படவுள்ளன.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

இன்று வியாழக்கிழமை வடமராட்சி கல்வி வலயத்தில் யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வகுப்பறைக் கட்டடம், செயற்பாட்டறை, வடமராட்சி வலயக் கல்வி அலுவலகக் கட்டடம், யாழ்.பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் கேட்போர் கூடம், வகுப்பறைக் கட்டடம், யா.சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் என்பன திறந்து வைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை யா. அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி வகுப்பறைக் கட்டடம், யா.அச்சுவேலி மத்திய கல்லூரி நூலகம், யா.கோப்பாய் நாவலர் மகா வித்தியாலய வகுப்பறைக் கட்டடம், யா.செங்குந்தா இந்துக் கல்லூரி வகுப்பறைக் கட்டடம் ஆகியவை திறந்து வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.கல்வி வலயத்தில் நெக்கோட் நிதியுதவியுடன் யா.கன கரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தில் நிர்மாணிக்கப்பட்ட விடுதியுடன் கூடிய வகுப்பறைக் கட்டடம் என்பவை திறந்து வைக்கப்படவுள்ளன. (அ-9)

நல்லூர் உற்சவத்தின்போது கலாசார உடை அணியுங்கள்

மாநகரசபை முதல்வர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலங்களின் போது கோயிலுக்கு வருபவர்கள் இந்துக்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் வருமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னைய காலங்களைவிட இவ்வருடம் நடைபெறவுள்ள நல்லூர் கந்தனின் திருவிழா சிறப்பு வாய்ந்ததாக அமையப் பெறவுள்ளது. பக்தர்களின் நலன் கருதி அனைத்து வசதிகளையும் யாழ். மாநகரசபை ஒழுங்கு செய்துள்ளது. ஆலயத்தின் தூய்மையினைக் கடைப்பிடிக்க வேண்டியது அடியார்களின் பொறுப்பே. அந்த வகையில் முதலில் ஆண்களும் பெண்களும் தாம் அணிந்து வரும் உடையில் கவனம் செலுத்தல் வேண்டும்.

ஆலய சூழலில் செருப்பு அணிந்து செல்வதற்கோ அநாகரிகமான ஆடை அணிந்து செல்வதற்கோ இம்முறை அனுமதி அளிக்கப்படமாட்டாது. இவற்றினைவிட ஆல்யச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டு உள்ளதோடு நடமாடும் வியாபாரமும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது எனக்குறிப்பிட்டார். (அ-2-4)

சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	நெல்லியடி	திருநெல்வேலி	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	50	50	100	50
உருளைக்கிழங்கு	80	100	90	80
பச்சைமிளகாய்	100	40	100	60
தக்காளி	140	160	130	160
மரவள்ளிக்கிழங்கு	50	50	40	40
கோவா	--	100	80	80
கரட்	100	120	140	140
பூசணி	60	80	60	60
புடோல்	30	40	50	60
வாழைக்காய்	50-60	50	50	60
சின்ன வெங்காயம்	60-120	80	90	60-90
பெரிய வெங்காயம்	80	90	80	80
பாகற்காய்	150	160	130	80
வெண்டிக்காய்	50-60	100	70	90
கருணைக் கிழங்கு	--	150	130	--
பயற்றங்காய்	250	250	120	110
லீக்ஸ்	--	160	130	140
பீற்றூட்	--	50	70	60
கறிமிளகாய்	--	80	180	160
முருங்கைக்காய்	30	70	100	80
போஞ்சி	100	140	100	140
கத்தரிதம்புள்ள	--	40	90	--
கீரை - 1 பிடி	15	30	30	20
தேசிக்காய்	80-90	60	100	80
தேங்காய் ஒன்று	15-25	25	25	20-22

இராசி பலன்

19.07.2012

(ஆடி 04, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

அமாவாசை முற்பகல் 10.18 மணிவரை

புனர்பூசம் முற்பகல் 11.42 மணிவரை

இராகுகாலம் 1.31-3.01 மணிவரை

சுபநேரம் 7.31-9.01 மணிவரை

மேடம் பெற்றோர் ஆதரவால் பெருமை கொள்ள வேண்டிய நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இடபம் நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், உடன்பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் விதத்தில் புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

மிதுனம் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வருமானம் அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

கடகம் மனதில் இனம்புரியாத கற்பனைகள் குடிகொள்ளும், வெளியூர்த் பயணங்களால் பண விரயங்கள் ஏற்படலாம், வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.

சிங்கம் பிறரது பொறுப்புக்களையும் ஏற்பதால் சஞ்சலங்கள் அதிகரிக்கும், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், உறவினர் நலன் கருதி பயணங்கள் செல்ல நேரிடலாம்.

கன்னி செல்வநிலை உயரும் நாள், விருந்தினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பயண வாய்ப்புக்கள் எண்ணியபடியே கைகூடும், திட்டமிட்ட காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

துலாம் தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், அந்நிய உதவியுண்டு, மனதில் உற்சாகம் பிறக்கும்.

விருச்சிகம் ஆன்றோர் சந்திப்பால் மகிழும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்களால் பலனுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், சிலருக்கு கட்டுப்படும் நிலை ஏற்படலாம்.

தனுசு எதிர்பாராத வகையில் மனம் வேதனைப்படும் வகையில் சில சம்பவங்கள் ஏற்படலாம், தேகநலன் பாதிக்கப்படலாம், முயற்சிகளில் தாமதமுண்டு, போசன சுகமுண்டு, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

மகரம் சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரும், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள், விட்டுப்போன உறவுகள் விரும்பி வந்து சேரலாம்.

கும்பம் உறவு, பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்,கடன் பிரச்சினைகள் சுமுகமாகும், தேக நலனில் புத்துணர்வு பெறுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

மீனம் வியாபார மேன்மையுண்டு, புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பரமேஸ்வரா வித்தியாலயம் என பெயர் மாற்றம்



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை **பரமேஸ்வரா** வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் வழங்கியுள்ளார்.

திருநெல்வேலியில் இயங்கிய பரமேஸ்வராக் கல்லூரி 1974 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து பரமேஸ்வராக் கல்லூரியை மீள அமைக்கும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவை சாத்தியப்படவில்லை.

இந்நிலையில் கடந்த ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் (கொழும்பு) ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக கலாசபதி கலையரங்கில் நடந்த சேர் பொன். இராமநாதன் நினைவு தினத்தில்; கலந்து கொண்ட உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க , சமூக சேவைகள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரிடம் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையை பரமேஸ்வராக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு பெயர் மாற்றம் செய்வதுடன் பரமேஸ்வராக் கல்லூரிக்கான வள ஒதுக்கீடுகளை திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு தர வேண்டும் எனவும் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க (கொழும்பு) தலைவரும் ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபருமான ரி.பேரின்பநாயகம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இக்கோரிக்கைக்கு அமைய திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையை பரமேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இம்முயற்சிகளுக்கு பாடசாலைச் சமூகம் மற்றும் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் ஆகியன தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன.

சைவ வித்தியாசாலை (சைவப் பள்ளிக் கூடம்) என்ற பெயரில் 1911 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்ட போது திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சைவ சமயத்தின் முழு முதற் கடவுளாகிய பரமேஸ்வரனின் பெயரை இப்பாடசாலைக்கு சூட்டுவது சைவ வித்தியசாலை என்ற அதன் ஆரம்பப் பெயருக்கு பொருத்துடையது என்ற அடிப்படையிலும் பரமேஸ்வராக் கல்லூரிக்கு இருக்கக் கூடிய வளங்களை இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கோதாவிலும் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு **பரமேஸ்வரா** என்ற பெயரைச் சூட்டுமாறு பாடசாலையின் அதிபர்,

பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவ சங்க கொழும்புத் தலைவர் ரி.பேரின்ப நாயகம், செயலாளர் கணநாதலிங்கம், யாழ்ப் பாணக் கிளையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கனக.நமநாதன், திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத் தலைவரும் ஓய்வு நிலை ஆசிரியருமான ச.முத்துலிங்கம், அதன் முன்னாள் தலைவர் கு. மோகன் ஆகியோரிடம் ஏற்கனவே கோரிக்கை விட்டிருந்தார்.

இதற்கு அமைவாக பரமேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயர் மாற்றத்திற்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் தற்போதைய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளருமான ப.விக்னேஸ்வரன் , யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா , யாழ். வலயக் கல்வி திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரநாதன் , நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசா ஆகியோர் தமது அனுமதிகளை வழங்கியிருந்ததுடன் பாடசாலையின் பெயர் மாற்றத்தில் அதிக கரிசனை கொண்டு அதனை செயற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா எதிர் வரும் செப்ரெம்பர் மாத நடுப் பகுதியில் நடைபெறுகின்ற போது பரமேஸ்வரா வித்தியாலயம் என பெயர் சூட்டும் நிகழ்வும் சம்பிரதாயமாக இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

திருநெல்வேலி மண்ணில் இயங்கிய பரமேஸ்வரா கல்லூரி மீண்டும் திருநெல்வேலியில் எழுச்சி பெறுவதற்கு திருநெல்வேலி மக்கள் வழங்கிய ஆதரவுக்கு சைவத் தமிழ் அபிமானிகள் தமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். (ந)

கொலைச் சம்பவத்தில் சந்தேக நபர் கைது

(கரவெட்டி)

அல்வாய் வடக்கு தேவாலயப் பகுதியில் உள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த வேலாயுதம் வள்ளிப்பிள்ளை (வயது 83) என்ற வயோதிபப் பெண்மணியின் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் நபர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டில் தனிமையில் வசித்து வந்த குறித்த வயோதிபப் பெண் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலையில் அவரது வீட்டில் பலத்த வெட்டுக்காயங்களுடன் சடலமாக பருத்தித் துறை பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

குறித்த வயோதிபப் பெண்ணை யாராவது பகை காரணமாகக் கொலை செய்தார்களா? அல்லது கொள்ளையிட வந்தவர்கள் யாராவது கொலை செய்தார்களா? என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் ஒருவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். (அ-3-24)

யாழ். செய்திகள்...

சுமங்கலி பூஜை

(சாவகச்சேரி)

சாவுகச்சேரி வாரிவளநாத சிவன் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் அமிர்தபாஷினி அம்பாளுக்கு நடைபெற்று வரும் ஆடிப்பூரத் திருவிழாவில் சுமங்கலிப் பூசையாக 100 தம்பதியினருக்கான விசேட அபிஷேகமும் பூசைகளும் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விசேட அபிஷேகத்தினை சிவஞான சம்மந்தப் பிரியன் சிவப்பிரம்மசிறி உமாசுதக் குருக்கள் தலைமை தாங்கி நடத்தவுள்ளார். (அ-3-29)

பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி. செம்மலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி. பி. ரஞ்சிதம் வழங்கவுள்ளார். (அ-3-24)

கற்றல் உபகரணங்கள் நன்கொடை

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இச்சம்மேளனத்தின் கணக்காய்வாளராக ந.கவிதரனின் ஏற்பாட்டில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த எஸ். உதயதர்சன், கே.மகேந்திரன் ஆகியோர் பின்தங்கிய கிராமமாகிய மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலத்திற்கு 300 அப்பியாசக் கொப்பியும் மற்றும் பாடசாலை உபகரணங்களை நேற்று வழங்கியுள்ளனர்.

அத்துடன் இப்பாடசாலையின் அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க ஒலிபெருக்கி சாதனமும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.ரி. விமலதாஸ், சாவகச்சேரி இளைஞர் சேவை உத்தியோகத்தர் செ. உதயமோகன், பாடசாலை பழைய மாணவர் சங்கச் செலாளர் எஸ். முரளி ஆகியோரும் பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்கள் , மாணவர்கள்எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர் காலத்திலும் இவ்வாறான சமூக சேவைகளை சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-3-37)

50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத வீதி

கவனத்தில் எடுப்பார்களா?

(சாவகச்சேரி)

மந்துவில் வடக்கு பகுதியில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள புளியந்திடல் கந்தசாமி ஆலயத்திற்கு செல்லும் சுமார் 2 கிலோமீற்றர் நீளமுள்ள வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக இவ்வீதி காணப்படுகின்றது.

விவசாய குடும்பங்களை கொண்டுள்ள இக்கிராம மக்கள் மேற்படி வீதியின் ஊடாகவே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

மழைக்காலத்தில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே இவ்வீதியூடாக பயணிக்கின்றனர்.

சரசாலை, கப்புது, மந்துவில் மேற்கு போன்ற இடங்களுக்கு செல்லக்கூடிய வீதிகள் இருந்த போதிலும் அது புனரமைக்கப்படாத நிலையில் அவற்றினூடாக பயணிக்க முடியாததால் பாவனை குறைந்து பற்றைக் காடுகளாக மாறியுள்ளன.

எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு மேற்படி வீதியை புனரமைத்துத் தருமாறு மக்களும் பயணிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பஷார்-II பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆ.எ.கானதீபன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை இராசாவின் தோட்ட வீதி அருள்மாதா கோவிலடியிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கோவில் வீதி இராசாவின் தோட்ட ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படும். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவின் நீண்ட 25 ஆண்டுகள்

எமக்காக இறைவனின் கொடை
06 - 05 - 1934

தனக்கான இறைவனின் அழைப்பு
20 - 07 - 1987

அமரர் மார்சல் இம்மனுவல் அரசநாயகம்
(புகையிரத பகுதி பாதுகாவலர்)

இருபத்தைந்து ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவிலும் தயவிலும் வாழ்கிறோம் புனித நீக்கொலார் நவநாட்கள்கால நீண்ட நினைவுடன் அவரது தோழமையில் நீங்கள் நித்திய இளைப்பாற்றியில் இறைவனின் சமூகத்தில் அடைக்கலமாய் இருப்பீர்கள் என்றும் நாமும் உம்மோடு காலகதியில் முழு சம்பாவனையில் இணைவோம் எனவும் உறுதியான நம்பிக்கையுடன் வாழ்கிறோம்.

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்"

அன்னாரின் நினைவுத்திருப்பலி (21-07-2012) சனிக்கிழமை காலை 7.00மணிக்கு மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்களை இத்திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் விண்ணக வாழ்விற்கு நன்றி கூறி செபிக்குமாறு அழைத்து நிற்கிறோம்.

அவரின் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், மைத்துனர், பேரப்பிள்ளைகள்.

உரன்
மிருசுவில் (059)

சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபடும் படகுகளின் பதிவுகள் இரத்து செய்யப்படும்

அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் படகுகளின் பகுதி நிரந்தரமாக இரத்து செய்யப்படவுள்ளதாக மீன்பிடி மற்றும் கடற்றொழில் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் படகுகளுக்கான பதிவு நிரந்தரமாக இரத்து செய்யப்படவுள்ளது.

கடந்த 10 ஆம் திக்தி முதல் 17 ஆம் திகதி வரையில் இவ்வாறான ஆறுபடகுகளையும் 293 பேரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

புகலிடக் கோரிக்கையாளர்களை சட்டவிரோதமான முறையில் அழைத்துச் செல்லும் படகுகளின் பதிவை நிரந்தரமாக இரத்து செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்யும் படகுகள் பயணத்தின் முடிவில் கைவிடப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

முத்தமிழ் விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

பூநகரில் மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழாவும் பூவிழை சஞ்சிகை வெளியீடும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் முத்தமிழ் மன்றத்தலைவர் செ. தபேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலைப் பேராசிரியர் க.சின்னத்தம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுர நாயகம், பூநகரி கோட்டக்கல்வி பணிப்பாளர் சு.தர்ம்ரத்தினம், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் அருட்தந்தை பா.பிறான்யன் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூலுக்கான மதிப்பீட்டுரையை ஓய்வுபற்ற யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க.தர்மராஜா நிகழ்த்தவுள்ளார். (அ-3-84)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்

நாட்டுக்கு எதிரான சூழ்ச்சிக்கு இவ்வரசியலமைப்பே காரணம் என்கிறார் குணதாச

(கொழும்பு)

நாட்டுக்கு எதிரான சூழ்ச்சிகளுக்கு அடிப்படையாக 13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தம் அமைந்துள்ளதாகவும் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனற சரத்தை அதில் இருந்து நீக்க வேண்டும்.

அதன் பின்னர் அரசியல் அமைப்பை முற்றாக திருத்தி 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை முற்றாக நீக்க வேண்டும் எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய அமைப்புகளின் ஒன்றியம் கொழும்பு சவ்சிறிபாயவில் நேற்று முதுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போது நாட்டிற்கு எதிரான சக்திகள் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பாரிய வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தத்திற்கு அமைய இந்த சக்திகள் செயற்பட்டு வருவதை காண முடிகிறது.

அண்மைக் காலமாக சில அரசியல்வாதிகள் தெரிவித்துள்ள கருத்துக்கள் மூலம் இதனை உணர முடிகிறது.

இதனால் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலை தொடர்ந்தும் நிலைபெறச் செய்ய வேண்டுமாயின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அதில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற சரத்து உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

அதன் பின்னர் அந்த அரசியல் அமைப்புத்திருத்தம் அரசியல் அமைப்பில்இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

முழுமை நல வாழ்விற்கு வேதாத்திரி மகரிஷியின் மனவளக் கலை யோகப் பயிற்சி

மேற்படி யோகாப் பயிற்சி பற்றிய இலவச அறிமுக விளக்கவுரையில் உங்கள் உடல் நலக் குறைவு சம்பந்தமான விளக்கத்தை 21.07.2012 சனிக் கிழமை மாலை 5 மணிக்கு இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர் இராசேந்திரம் அவர்களிடம் அறிந்து கொள்ளலாம். இதனைத் தொடர்ந்து அகத்தாய்வு ஒன்றுக்கான பயிற்சியும் நடைபெறும்.

இடம்:- 14/4, கோவில் வீதி, 1 ஆம் ஒழுங்கை, சாந்தஜோன் தேவாலயம் அருகாமை, யாழ்ப்பாணம். (இ)

மேலதிக தொடர்புகளுக்கு:-0774528839, 0714711128, 021 3202285

மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1979 இந்து செங்குந்தர்
நட்சத்திரம்:- பரணி 3
உயரம்: 5'8"
கி.பா:-47.25
தொழில்:- பட்டதாரி நூலக உதவியாளர் B/099

பிறப்பு:- 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-திருவோணம் 1
உயரம்: 5'8"
கி.பா:-66.5, 1 இல் செவ்
தொழில்:-பட்டதாரி அரச ஊழியர் B/149

பிறப்பு:- 1981 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-சுவாதி 3
உயரம்: 5'3"
கி.பா:-67.45, 7 இல் செவ், சூரி
தொழில்: MBBS டாக்டர்
(திருமணம் எழுதிக் குழம்பியது) G/126

பிறப்பு:- 1977 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
உயரம்:5'5'
கி.பா:79,1 இல் செவ்
தொழில்:-அரச நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
(விவாகரத்துப் பெற்றவர்) G/148

பிறப்பு:- 1960 இந்து வீரசைவம்
நட்சத்திரம்:-சுவாதி 1
உயரம்: 5'2"
கி.பா:-27, 7 இல் செவ்
தொழில்:-சுயதொழில்
(தாரமிழந்தவர்) B/114

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

பிறப்பு:- 1989 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-புனர்பூசம் 2
உயரம்: 5'5"
கி.பா:-47.75
G/133

பிறப்பு:- 1977 இந்து
நட்சத்திரம்:-சித்திரை 4
உயரம்: 5'8"
கி.பா:-16.75
தொழில்:-Msc பொறியியலாளர் B/111

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-விசாகம் 4
உயரம்: 5'3'
கி.பா:-8.5
G/132

உடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சிக்கோட்டத்தின் ஆங்கிலதின எழுத்தாக்கப்போட்டி முடிபுகள்

(சிவநகர்)

கிளி.வலயத்திற்குட்பட்ட கரைச்சிக் கோட்ட ஆங்கிலதின எழுத்தாக்கப்போட்டி முடிபு களை கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் க.முரு கவேள் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை யும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங் கள் வருமாறு,

உறுப்பெழுத்து

தரம் 3

வி.பானுஜன் (கிளி/கிளிநொச்சி ம.வி.), பாலகுமரன் எழில்வதனன் (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி), பேரின்பலிங்கம் சோபிதன் (கிளி/திருவையாறு ம.வி.)

தரம் 4

தேவகுமார் சதுர்ஜா (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.), கனகராஜா சதுசயினா (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி), விஜயகுமார் சுபரிஜா (கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை)

தரம் 5

விஜயகுமார் கின்சிகா (கிளி/அக்கராயன் ம.வி.), பிரேமதாஸ் அமுதினி (கிளி/கிளிநொ ச்சி மத்திய ஆரம்ப வித்தி), தர்மராசா பிறைமதி (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி)

தரம் 6

ரவீந்திரராஜா சௌந்தர்யா (கிளி/கிளிநொ ச்சி இந்து கல்லூரி), ஜேசுதாஸன் வேணுஜா (கிளி/கனகாம்பிகைக்குளம்), இளஞ்சுரேஷ் தமிழினி (கிளி/வட்டக்கச்சி ம.வி.)

தரம் 7

சிறிதரன் தர்ஷிகா (கிளி/ சிவநகர் அ.த. க.பா.), சூசைநாதர் தர்ஷா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), பவானந்தன் தஷ்மிகா (கிளி/உருத்திரபுரம் ம.வி.)

தரம் 8

தயாபரன் பவித்திரா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ஏ.ஜெலினி (கிளி/சென். பற்றிமா றோ.க.த.க.பா.), குணரத்தினம் டினோஜா (கிளி/இராமநாதபுரம் ம.வி.)

தரம் 9

தர்மினி மகேந்திரம் (கிளி/பாரதி வித்தி), ராஜ்குமார் சுஸ்மிதா (கிளி/கிளிநொச்சி ம.வி.), இதயசிவதாஸ் சங்கீர்த்தனா (கிளி/உருத்திர புரம் ம.வி.)

தரம் 10

கணேசமூர்த்தி கீர்த்திகா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), விஜயகுமார் அருளினி (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), மதியழ கன் அபிலாயினி (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.)

தரம் 11

உதயகுமார் வஸ்திக்கா (கிளி/கிளிநொச்சி ம.வி.), சிவகுமார் தட்ஷிகா (கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி), விக்னேஸ்வரன் கிருசாந்தி (கிளி/சென்.திரேஷா பெண்கள் கல்லூரி)

தரம் 12

தேவச்செல்வன் தர்ஷிகா (கிளி/வட்டக்கச்சி ம.வி.), அருளானந்தம் கமில்சு (கிளி/கிளிநொ ச்சி இந்துக்கல்லூரி), பத்மநாதன் ரினோஷன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

தரம் 13

குகராஜ் நித்திலன் (கிளி/கிளிநொச்சி இந் துக் கல்லூரி), சாந்தரூபன் பவித்திரன் (கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி), திருச்செல்வம் கிஷாந்தினி (கிளி/உருத்திரபுரம் ம.வி.)

கட்டுரை எழுதுதல்

தரம் 6

மோகனராஜா பிரசாந் (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), சந்திரசேகரம் நகுலசேகரி (கிளி/கிளிநொச்சி ம.வி.), எம்.மேனகா (கிளி/ சென்.திரேஷா பெண்கள் கல்லூரி)

தரம் 7

பூலோகராசா கிஷோபிகா (கிளி/வட்டக்கச்சி ம.வி.), கம்ஷிகன் நிசாந் (கிளி/கிளிநொச்சி ம.வி.), கௌதமன் சிவஞானம் (கிளி/கிளிநொ ச்சி ம.வி.)

தரம் 8

பத்மநாதன் கஜானி (கிளி/கிளிநொச்சி ம.வி.), சிவபாலன் பவித்திரன் (கிளி/கிளிநொ ச்சி ம.வி.), ராஜ்குமார் யுவரூபன் (கிளி/கிளி நொச்சி மத்திய கல்லூரி)

தரம் 9

நவரத்தினம் கௌசிகன் (கிளி/கிளிநொச்சி ம.வி.), பேரிலிங்கசிவம் தர்ஷிகா (கிளி/கிளி நொச்சி ம.வி.), நவகிருஷ்ணன் சஜீப் (கிளி/ வட்டக்கச்சி ம.வி.)

தரம் 10

காசலிங்கம் தனுஷா (கிளி/வட்டக்கச்சி ம.வி.), நவரத்தினராசா ஜதாங்கி (கிளி/வட்டக் கச்சி ம.வி.), பாஸ்கரன் கௌசிகா (கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.)

தரம் 11

சுவர்ணமயூரன் தியாகராஜன் (கிளி/கிளி நொச்சி ம.வி.), தட்சணாமூர்த்தி பார்த்தீபன் (கிளி/வட்டக்கச்சி ம.வி.)

தரம் 12

சிவஞானம் மகீசா (கிளி/கிளிநொச்சி மத் திய கல்லூரி), கௌதிகா கஜோனிகா (கிளி/ கிளிநொச்சி ம.வி.), பாலேந்திரராசா நிதர்ஷனா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல் லூரி)

தரம் 13

ஜசோதரன் கரிராம் (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), சதானந்தம் லாவண்யா (கிளி/உருத்திரபுரம் ம.வி.),புஸ்பராஜா தர்ஷன் (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

சொல்வதெழுதுதல்

தரம் 6

ஜெகதீஸன் லிஜன்சியா (கிளி/கிளிநொச்சி ம.வி.), பாலசுந்தரம் பரணிதரன் (கிளி/திரு வையாறு ம.வி.), திருஞானசம்பந்தன் துவா ரகா (கிளி/சென்.திரேஷா பெண்கள் கல்லூரி)

தரம் 7

நிமலன் கோமிஷா (கிளி/கிளிநொச்சி இந் துக்கல்லூரி), ஆர்வலன் தவச்செல்வம் (கிளி/ கிளிநொச்சி ம.வி.), நகுலகுமார் அபிராமி (கிளி/திருவையாறு ம.வி.)

தரம் 8

(சென்.திரேஷா பெண்கள் கல்லூரி), (சென். திரேஷா பெண்கள் கல்லூரி)

தரம் 9

யுவராஜ் கார்த்திகா (கிளி/திருவையாறு ம.வி.), குலதாஸன் கிருத்திகா (கிளி/கிளிநொ ச்சி ம.வி.), மோகன் டினோஜிதா (கிளி/கிளி நொச்சி ம.வி.)

தரம் 10

சிவகுமார் சுகித்குமார் (கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி), வேதாரணியம் நிதர்ஷினி (கிளி/திருவையாறு ம.வி.), நாகராசா விதுஷா (கிளி/உருத்திரபுரம் ம.வி.)

தரம் 11

நவனகுமார் துவாரகன் (கிளி/திருவை யாறு ம.வி.), சபேஷன் நிதுஷா (கிளி/திருவை யாறு ம.வி.), சுப்பிரமணியம் ரொஷானி (கிளி/ பாரதி வித்தி)

தரம் 12

சபாரத்தினம் மெதினா (கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி)

தரம் 13

ராஜேந்திரன் டினோஷா (கிளி/வட்டக்கச்சி ம.வி.), மகேந்திரம் கிருத்திகா (கிளி/உருத்திர புரம் ம.வி.), சிறீஸ்கந்தராசா பிரியா (கிளி/ உருத்திரபுரம் ம.வி.)

(அ-9-254)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உறங்கி விட்டதா? -ரணில் கேள்வி

(கொழும்பு)

கிழக்கில் உள்ள அரச காணிகள் எவருக் கும் தெரியாமல் கிழக்கிற்கு வெளியே உள்ள வர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்க நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் தலைவர்களு க்கும் உறுப்பினர்களுக்கும் எரிபொருட்களை வழங்குவது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவை அமை ப்பது தொடர்பான சட்டமூலம் 1994 இல் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது அதற்கு ஆதரவு வழங்கவேண்டுமென நான்தான் குரல் கொடுத்தேன். திருடர்களைப் பிடிப்பதற்காகத்தான் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உரு வான திருடர்கள் பிடிக்கப்பட்டார்களா? நாட் டில் ஊழல், மோசடிகள் தொடர்ச்சியாக இடம் பெறுகின்றன. இவை தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணை நடத்துகின் றதா?

கிழக்கில் அரச காணிகள் எவருக்கும் தெரி யாமல் கிழக்கிற்கு வெளியே உள்ளவர்களு க்கு விற்கப்படுகின்றன. கிழக்கில் உள்ள வர்களுக்கு அல்ல. இப்போது புதையல் தோண் டும் புதிய ஊழல், மோசடி நாடெங்கிலும் இடம்பெற்று வருகின்றது. இதன்மூலம் பணம் சம்பாதிக்கப்படுகின்றது. படையினர் சென்று ஓர் இடத்தை சுற்றி வளைக்கின்றனர்.

அந்த இடத்தில் புதையல் தோண்டுகின் றனர். இவ் வாறு அதிகமான ஊழல், மோசடிகள் நாட்டில் இட ம்பெற்று வருகின்றன. இவற்றை ஏன் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு விசாரிப் பதில்லை?

ஊழல், மோசடி மிக்க நிறுவனங்கள் எத்த னையோ உள்ளன. அவற்றையெல்லாம் அழைத்து இந்த ஆணைக்குழுவால் விசா ரிக்க முடியும் தானே? ஏன் அவ்வாறு செய்வ தில்லை என ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பினார். (அ-2)

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய மாண வர்களுக்கு பால் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசா லையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது நல்லூர் கோட் டக்கல்விப்பணிப்பாளர் சி.மாணி க்கராஜா மாணவி ஒருவரு க்கு பாலினை வழங்குவதை யும் மாணவர்கள் பால் அருந் துவதையும் படங்களில் காண லாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆடி மாத ராசி பலன்

16.07.2012 - 16.08.2012

தனுசு

மூலம், பூராடம், உத்ராடம் 1 ஆம் பாதம்

திடீர் மாற்றங்கள் தித்திக்க வைக்கும்!

மனச் சாட்சிக்கு விரோதம் இல்லாமல் நடந்து கொள்ளும் மகத்தான குணம் பெற்ற தனுசு இராசி நேயர்களே!

பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், பாசத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள். குணத்தில் தங்கம் என்று பெயரெடுத்து கொள்வீர்கள். வாழ்க்கையில் மிக வேகமாக முன்னேறவேண்டுமென்ற எண்ணம் உங்கள் மனதில் பதிந்திருக்கும். வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தவர்களை மறக்க மாட்டீர்கள். தேசப்பற்று மிக்கவர்களாக விளங்குவீர்கள்.

உங்களுக்கு இந்த ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஆறாமிடத்திலும் பத்தாமிடத்திலும் கூட்டுக் கிரகங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவே, திடீர் மாற்றங்கள் தித்திக்க வைக்கும். எதை நினைத்துக் கொண்டிருந்தீர்களோ, அந்த நிகழ்வு நடைபெறத் தொடங்கும். குரு- சுக்கிர சேர்க்கை இருப்பதால் நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

எதிரிகளின் பலம் குறையும் இந்த நேரத்தில் ஏதாவது ஒரு புதிய பொறுப்புகளும், பதவிகளும்கூட கிடைக்கலாம். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து ஏற்படும். செவ்வாய், சனி சேர்க்கை பத்தில் இருப்பதால் தொழிலில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவதுதான் நல்லது. இல்லையேல், இலாபம் எதிர்பார்த்த படி வந்தாலும் அது எதிரிகளின் கைகளுக்கு போய் சேர்ந்துவிடும்.

பகை கிரகங்களின் சேர்க்கை இருக்கும் நேரத்தில் பக்கபலமாக இருப்பவர்களை நம்புவதைக் காட்டிலும் இறைவனை நம்புவது பலன்தரும்.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 29 ஆம் திகதி மிதுன இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். புதனும் சுக்கிரனும் இணையும் இந்தநேரத்தில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். ஊர் மாற்றம், இடமாற்றங்களும் ஒரு சிலருக்கு ஏற்படும். நாடு மாற்றங்களைக் காண விரும்புவர்கள் சனிப் பெயர்ச்சி வரை பொறுத்திருப்பதே நல்லது. குறிப்பாக சனியின் துலாம் இராசி சஞ்சாரத்திற்குப்பிறகு படிப் படியாக நல்ல காரியங்கள் நடைபெறத் தொடங்கும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஆகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக புதன் ஆதித்திய யோகம் செயற்படும். அஷ்டமாதிபதியுடன் இணைவதால் ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் பலன் தரும். தந்தை வழியில் அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் பகை உருவாகலாம். வீடு மாற்றம், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

செவ்வாய் பெயர்ச்சி காலம்

ஆகஸ்டு 14 ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் பிரவேசிக்கிறார். சுக லாபாதிபதி 10 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து பழகுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை தள்ளி வைப்பது நல்லது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

கடக புதனின் சஞ்சாரம்

ஆகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக புதன் ஆதித்திய யோகம் செயற்படும். அஷ்டமாதிபதியுடன் இணைவதால் ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் பலன் தரும். தந்தை வழியில் அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் பகை உருவாகலாம். வீடு மாற்றம், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

செவ்வாய் பெயர்ச்சி காலம்

ஆகஸ்டு 14 ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 5 க்கு அதிபதி 11இல் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் பெருகும். பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு. எதிர் பார்ப்புகள் அனைத்தும் நிறை வேறும். இந்த மாதம் குரு தட்சணா மூர்த்தி வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். குதூகலங்கள் வந்து சேரும்.

இந்த மாதம் வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும் மாதமாகவே உங்களுக்கு அமையப்போகிறது. மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். வருமானம் போதுமானமதாகவே இருக்கும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். மூன்றாம் நபரிடம் வீட்டுத் தகவல்களை சொல்வதை தவிர்ப்பது நல்லது. அங்காரகன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிட்டும் வாய்ப்புண்டு

அங்காரக வழிபாடும், சனீஸ்வரன் வழிபாடும் முறையாக வைத்துக் கொண்டால் தங்குதடைகள் அகலும். தனலாபமும் வந்து சேரும். பிரதோச வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். பிரச்சினைகள் குறையும். பவுரண்மி நாளில் கிரிவலம் வருவதன் மூலம் கீர்த்திகளை அடையலாம். பொதுவாக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போவதால் மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் வந்து சேரும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். சேமிப்பு உயரும். இந்த நேரத்தில் இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று யோசிப்பதை தவிர்ப்பது நல்லது. அங்காரகன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்கராயம்

மகரம்

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 பாதம்

நிம்மதி தரும் ஆண்டவன் சந்நிதி! ஏதாவது ஒரு சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படும் மகர இராசி நேயர்களே!

கடுமையாக உழைப்பதற்கு தயங்காதவர்கள் நீங்கள். முழுமையான கவனத்தைச் செலுத்தி ஒரு காரியத்தை முடித்துக் கொடுப்பதிலும் வல்லவர்களாக விளங்குவீர்கள். உறவு, பகை பார்க்கும் மனிதர்களுக்கு மத்தியில் உறவினர் பகை உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். முன்கோபத்தை குறைத்துக் கொண்டால் முன்னேற்றத்தில் பாதிப்பு ஏற்படாது.

உங்களுக்கு இந்த ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அஷ்டமாதிபதி சூரியன் உங்கள்இராசியைப் பார்க்கிறார். எனவே, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரமிது. இராசி நாதன் சனி, செவ்வாயுடன் இணைந்து ஒன்பதில் சஞ்சரிக்கிறார். எனவே, பெற்றோர் உடல் நலத்திலும் கவனம் தேவைப்படும் நேரம். குருவின் பார்வை சனி, செவ்வாயின் மீது பதிவதாலும் உங்கள் இராசியில் பதிவதாலும் மலைபோல் துயர் வந்த பனிபோல் விலகும்.

இருப்பினும் கன்னிச் செவ்வாய் கடலும் வற்றும், என்பது பழமொழி. எனவே, 4, 11 க்கு அதிபதியான செவ்வாய் 9 ஆம் இடத்தில் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் நேரத்தில் பொருள் விரயங்கள் அதிகரிக்கும். வாங்கிய சொத்துக்களையும் விற்க நேரிடலாம். உறவினர்களையும், உடன்பிறப்புகளையும் நம்பி இறங்கிய காரியங்கள் நல்லபடியாக முடியுமா என்பது சந்தேகத்தான். சனி, துலாம் இராசிக்கு செல்லும் வரை இன்னும் சிலமாதங்கள் பொறுமையைத் கடைப் பிடிப்பது நல்லது.

கருநிற காகம் ஏறி காசினி தன்னில் காக்கும் ஒரு பெரும் கிரகமான ஒப்பற்ற சனியை பூஜிப்பதோடு, சனிக்கவசத்தை வாசித்து பாராயணம் செய்தால் நன்மை கிடைக்கும்.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 29 ஆம் திகதி மிதுன இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 5, 10 க்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகள் வழியில் விரயம் ஏற்படலாம். குழந்தைகளின் கல்வி முயற்சிக்கும், கலை தாண்டும் முயற்சிக்கும் வித்திடுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை தள்ளி வைப்பது நல்லது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

கடக புதனின் சஞ்சாரம்

ஆகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக புதன் ஆதித்திய யோகம் செயற்படும். அஷ்டமாதிபதியுடன் இணைவதால் ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் பலன் தரும். தந்தை வழியில் அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் பகை உருவாகலாம். வீடு மாற்றம், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

செவ்வாய் பெயர்ச்சி காலம்

ஆகஸ்டு 14 ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 5, 10 க்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகள் வழியில் விரயம் ஏற்படலாம். குழந்தைகளின் கல்வி முயற்சிக்கும், கலை தாண்டும் முயற்சிக்கும் வித்திடுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை தள்ளி வைப்பது நல்லது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

கடக புதனின் சஞ்சாரம்

ஆகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக புதன் ஆதித்திய யோகம் செயற்படும். அஷ்டமாதிபதியுடன் இணைவதால் ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் பலன் தரும். தந்தை வழியில் அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் பகை உருவாகலாம். வீடு மாற்றம், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

செவ்வாய் பெயர்ச்சி காலம்

ஆகஸ்டு 14 ஆம் திகதி துலாம் இராசியில் செவ்வாய் பிரவேசிக்கிறார். சுக லாபாதிபதி 10 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கட்டிட பணியில் ஆர்வம் கூடும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

இம்மாதம் இராசிநாதன் சனி, செவ்வாயுடன் சேர்க்கை பெற்று மாதம் தொடங்குவதால் சனீஸ்வர வழிபாடும், அங்காரக வழிபாடும் முறையாக செய்வது நல்லது.

இம்மாதம் வரவும், செலவும் சமமாகும் மாதமாகவே இருக்கிறது. செவ்வாய், சனி சேர்க்கையின் காரணமாக பெற்றோர்களின் பாசம் குறையலாம். உற்றார், உறவினர்களை அனுசரித்து செல்வதன் மூலம் உன்னதநிலை அடைய இயலும். குருவின் பார்வை பலத்தால் குடும்ப ஒற்றுமை கூடும். கணவன்- மனைவிக்குள் இணக்கம் ஏற்படும். கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறியும் ஒரு சிலருக்கு ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராக, மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். மாதக் கடைசியில் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். முருக பெருமான் வழிபாடு, முன்னேற்றத்தை வழங்கும். (தொடரும்)

குருவின் பார்வை சனி, செவ்வாயில் பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபையும் வணிகர் கழகமும் இணைந்து ஸ்ரான்லி வீதியை புனரமைக்கும்

இருசாராரும் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி வீதியை சிங்கப்பூரில் அமைக்கப்பட்டுள்ள வீதிகளைப்போன்று செப்பனிடவுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரான்லி வீதியிலுள்ள வர்த்தகர்களுடனான சந்திப்பொன்று யாழ்.வணிகர் கழகத்தின் பணிமனையில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

இதில் நகரின் அபிவிருத்தி தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நகரில் காணப்படும் வாய்க்கால்களைப் புனரமைப்பது, குடிதண்ணீர் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்பன தொடர்பாகவும் முடிபெடுக்கப்பட்டன.

தற்போது காணப்படும் ஸ்ரான்லி வீதி இருபக்கமும் மணற்பாங்கான இடமாக காணப்படுவதால் கடும்காற்று வீசும்போது தூசுக்கள் கடைகளினுள் அடித்துச் செல்கின்றன. அத்துடன் மழைகாலங்களில் இவ் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கக்கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இவற்றைவிட வாகனங்களை நிறுத்துவதனால் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு உள்ளாக நேரிடுவதாக வர்த்தகர்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் இவ்வீதியின் இருபுறங்களுக்கும் கலவையிட்டு செப்பனிட்டு வீதியை மேலும் அகலமாக்கிக்கொள்ள முடியும். இதற்கு ஒரு அடிக்கு 3 ஆயிரம் ரூபாய் செலவாகும் எனவும் இந்நிதியை வணிகர் கழகமே வழங்க வேண்டும் என மாநகரசபை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் வீதி செப்பனிடப்படுவதானது மாநகரசபையின் கடமையேயாகும். இதற்குத் தானே நாம் வரி வழங்குகின்றோம் என வர்த்தகர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டு நிதி வழங்குவதற்கும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவித்த மாநகரசபை முன்னுரிமை அடிப்படையில் பார்க்கும்போது எமக்கு ஸ்ரான்லிவீதியை செப்பனிடும் அவசியமில்லை. யாழ். நகரிலுள்ள வீதிகள் நல்ல நிலையிலேயே காணப்படுகின்றன.

இதனடிப்படையில் பார்க்கும்போது படுமோசமாக ஏனைய இடங்களில் சிதைவடைந்து காணப்படுகின்ற வீதிகளைப் புனரமைக்க வேண்டிய கடமை எமக்குண்டு. எனவே வணிகர் கழகத்தின் அனுசரணையோடு ஸ்ரான்லி வீதியை புனரமைக்கமுடியும் என வும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இரு பகுதியினருக்கும் பாதிப்பு இல்லாமல் ஒரு தொகையினை வணிகர் கழகம் ஏற்றுக்கொள்வதென்றும் மறு தொகையினை மாநகரசபை பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டு விரைவில் ஸ்ரான்லி வீதியின் இருபக்க இடை வெளிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் குறித்த வீதியில் குடிதண்ணீர் வசதியினை ஏற்படுத்தல், சிறந்த வடிகால்களை புனரமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டன. (அ-2-4)

அரசுக்கு சார்பான 400 பேரின் கறுப்புப்பணம் சுவிஸ்வங்கியில்

கிரியெல்ல எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் தொடர்புடைய சுமார் 400 பேர் சுவிட்சர்லாந்து வங்கிகளில் கணக்குகளைப் பேணி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள், அரசியல் வாதிகள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், உயர் அரச அதிகாரிகள் உள்ளிட்ட சுமார் 400 பேர் இவ்வாறு சுவிட்சர்லாந்து வங்கிகளில் கணக்குகளை பேணி வருகின்றனர்.

ஏற்றுமதி வருமானத்தில் 20 வீதமான பணம் தரகு உள்ளிட்ட ஊழல் மோசடிகளினால் விரயமாக்கப்படுகிறது. அநேகமான பாரிய கொடுக்கல்- வாங்கல்களின் போது ஊழல்மோசடிகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு ஊழல் மோசடிகளின் மூலம் ஈட்டப்படும் வருமானம் வெளி நாட்டு வங்கிகளில் வைப்புச்செய்யப்படுகின்றன என்றார்.

இவரின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கத்தரப் பிலிருந்து இதுவரையில் எவ்வித பதில்களும் அளிக்கப்படவில்லை. (அ-2)

போக்குவரத்து வசதிகள் இன்றி தள்ளாடுகிறது தட்டுவன்கொட்டி

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தட்டுவன்கொட்டி கிராமத்திற்கு பேருந்து சேவை இன்மையால் பயணம் மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

யுத்தத்திற்கு முன் இடம்பெற்று வந்த இப்பேருந்து சேவையானது கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டதிலிருந்து இன்றுவரை இடம்பெறுவதில்லை.

தொழிலுக்காகவும் வைத்திய தேவைகளுக்காகவும் பயணிக்கும் பயணிகளும் உயர்கல்வி கற்பதற்கு செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதுமட்டுமன்றி இக்கிராமத்தில் தனியார் கல்வி நிலையங்கள் இன்மையால் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவர்களும் 3 கிலோ மீற்றர் நடந்து சென்று ஆனையிறவில் இருந்தே பேருந்தில் பயணிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 100 இற்கு மேற்பட்ட குடும்பங்களில் 300 அங்கத்தவர்கள் வசிக்கின்ற நிலையில் போக்குவரத்து வசதியின்மை பெரும் பிரச்சினையாக உள்ளது.

அத்துடன் பேருந்து சேவை இன்மையால் நடந்தும் வேறு வாகனங்களிலும் பயணிக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் நிலை பரிதாபமாகவே உள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து பேருந்து சேவையை ஏற்படுத்தி போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

குன்னூரிலிருந்து நாடு திரும்பினர் அதிகாரிகள்

ஜெயலலிதா வைத்தார் ஆப்பு

(குன்னூர்)

குன்னூர் வெலிங்டன் இராணுவக்கல்லூரிக்கு சென்ற இலங்கை இராணுவ அதிகாரிகள் உட்பட 10 நாடுகளை சேர்ந்த 25 இராணுவ அதிகாரிகளும் நேற்று முன்தினம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இராணுவக் கல்லூரி குன்னூரில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொள்ள 10 நாடுகளைச் சேர்ந்த 25 இராணுவ அதிகாரிகள் சென்றனர்.

அவர்களில் இலங்கை விமானப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஏர்வைஸ் மார்ஷல் ஜெகத் ஜூலங்கா தியாஸ், கடற்படையை சேர்ந்த உயர் அதிகாரி ரியர் அட்மிரல் எஸ்.ரணசிங்கே ஆகியோர் இடம்பெற்று இருந்தனர்.

இவர்கள் அனைவரும் குன்னூரில் உள்ள ஒரு தனியார் நட்சத்திர ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டு இருந்தனர். இவர்களின் வருகையால் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

மேலும் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் எங்கேயும் பயிற்சி அளிக்கக்கூடாது என்று வலியுறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அத்துடன் பல்வேறு அமைப்புக்கள் அவர்களை அனுப்பாவிட்டால் தொடர் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தனர்.

இதன் காரணமாக நேற்று முன்தினம் 5.45 மணிக்கு இலங்கை விமானப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஏர்வைஸ் மார்ஷல் ஜெகத் ஜூலங்கா தியாஸ் கடற்படையைச் சேர்ந்த உயர் அதிகாரி ரியர் அட்மிரல் எஸ்.ரணசிங்கே உட்பட 10 வெளிநாடுகளை சேர்ந்த 25 இராணுவ அதிகாரிகள் வெலிங்டனில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். (அ-2)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும்

அகில இலங்கை சைவ மாநாடு -2012

நாள்:- நந்தன வருஷம் ஆடி மாதம் 5 ஆம், 6ஆம், 7ஆம் நாள் 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 20, 21, 22 வெள்ளி, சனி, ஞாயிறு

இடம்:- சபை நாவலர் ஆச்சிரம மண்டபம் நீராவியடி, யாழ்ப்பாணம்.

மாநாட்டுப் பெருந்தலைவர்
பேராசிரியர், முனைவர் வை. இரத்தினசபாபதி
(சென்னை)

நாளைய நிகழ்வுகள்

(ஆடி மாதம் 05 ஆம் நாள் 2012.07.20 வெள்ளிக்கிழமை)

தலைமை
பேராசிரியர், முனைவர் வை. இரத்தினசபாபதி
(சென்னை)

பி.ப 4.00 மணி:- வண்ணை சிவன் கோவிலில் வழிபாடு
பி.ப 4.30 மணி:- மண்டபம் வருதல் மங்கல விளக்கேற்றல்
பி.ப 4.45 மணி:- திருமுறை ஓதல் (திரு.சி.கிருஷ்ணமூர்த்தி)
(அமைப்பாளர்-அகில இலங்கைத் திருமுறைமன்றம்)
பி.ப 5.00 மணி:- வரவேற்புரை
சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை
(சமயப்பிரசார அமைச்சர் சைவபரிபாலன சபை)
பி.ப 5.15 மணி:- அருளுரை- மூலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
(நல்லைத் திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்)
பி.ப 5.30 மணி:- அறிமுகவுரை- த.சண்முகலிங்கம்
(தலைவர் சைவபரிபாலனசபை)
பி.ப 5.45 மணி:- தலைமையுரை
பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி
(மாநாட்டுப் பெருந்தலைவர்)
பி.ப 6.45 மணி:- நன்றியுரை
திரு.தி.மாணிக்கவாசகர்
(செயலாளர்-சைவபரிபாலன சபை)
பி.ப 6.55 மணி:- தேவாரம்
பி.ப 7.00 மணி:- பண்ணிசை
கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தர்
(துறைசை ஆதீன இசைப்புலவர் தாவடியூர்)

சைவாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவ நெறிப்பரவலர்
த.சண்முகலிங்கம்
தலைவர்

தி.மாணிக்கவாசகர்
செயலாளர்

மு.திருஞானசம்பந்தபிள்ளை
சமயபிரசார அமைச்சர்

சைவ பரிபாலன சபை
66, கஸ்தூரியார் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலக யுத்தம்

ஒரு மீள்பார்வை 192

குவாண்டுங் இராணுவம் முறியடிக்கப்பட்டதும் இராணுவ வெறிகொண்ட ஜப்பானின் நிபந்தனையற்ற சரணாகதியும்

...அதேநாளன்று (மூதந்த் சியான் நாகருக்கான சண்டை-நாள்) இரவில் 2-வது தொலைகிழக்கு சேனையின் துருப்புகள், சுன்காரி, ஜாவோஹேய் திசைகளில் தாக்குதலைத் தொடங்கின. செம்பதாகை விருது பெற்ற அமூர் ப்ளீட்டின் ஆதரவோடு இவை அமூர் ஆற்றைக் கடந்து எதிர்க் கரையில் இருந்த தாக்குமுனைகளைக் கைப்பற்றி, இதன் பின் நாட்டின் உட்பகுதியை நோக்கி முன்னேற ஆரம்பித்தன. ஆகஸ்ட் 14 ஆம் திகதி வாக்கில் துருப்புகள் எதிரிக்குப் பேரிழப்பை உண்டாக்கி, 50-200 கி.மீ. தூரம் முன்னேறின.

இவ்வாறாக தாக்குதலின் முதல் 6 நாட்களில் சோவியத் துருப்புகள் பலப்படுத்தப்பட்ட வட்டங்களில் கோட்டைப் பிளந்து, எதிரித் துருப்புகளின் பிரதான சக்திகளை முறியடித்து ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை பேரழிவின் முன் கொண்டு வந்து நிறுத்தின.

ஆகஸ்டு 14 ஆம் திகதி ஜப்பானிய அரசாங்கம் சரணடைவதென முடிவு செய்தது. ஆனால், போர் நடவடிக்கைகளை நிறுத்துமாறு இராணுவத்திற்குக் கட்டளையிடப்படவில்லை. குவாண்டுங் இராணுவம் தொடர்ந்து எதிர்ப்பு காட்டி வந்தது. எனவே, சோவியத் துருப்புகளுக்குத் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடருமாறு கட்டளையிடப்பட்டது.

ஆகஸ்டு 17 ஆம் திகதி வாக்கில் மூன்று சேனைகளின் துருப்புகளும் வடகிழக்கு சீனாவின் மையப் பிரதேசங்களை அடைந்து வட கொரியத் துறைமுகங்களைக் கைப்பற்றி 8-வது சீன மக்கள் விடுதலை இராணுவத்துடன் கால்கன் பிரதேசத்தில் இணைந்தன. இதன் விளைவாய் குவாண்டுங் இராணுவம் தலைநாட்டிலிருந்து துண்டிக்கப்பட்டது. மேலும் இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எல்லா தற்காப்பு எல்லைகளையும் இழந்தது. எனவே, இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு தொலைகிழக்கிலிருந்த சோவியத் படைத் தலைமைக்கு வேண்டு கோள் விடுக்குமாறு குவாண்டுங் இராணுவத் தலைமை நிர்ப்பந்திக்கப்பட்டது.

அதே நாளன்று போரிடும் குவாண்டுங் இராணுவத்தின் எல்லாப் படைப் பிரிவுகளும் உடனடியாகப்போர் நடவடிக்கைகளை நிறுத்தி ஆயுதங்களைக் கீழேபோட வேண்டும் என்ற குவாண்டுங் இராணுவத் தளபதி யமாடாவின் கட்டளை வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது.

ஆனால், கட்டளைக்குப் பின்னரும் ஜப்பானியத் துருப்புகளில் பெரும் பகுதி தொடர்ந்து எதிர்ப்பைக் காட்டியது. போர் முனையின் ஒரு சில இடங்களில் மட்டுமே எதிரி சரணடைய ஆரம்பத்தான்.

சரணடையும் ஜப்பானியத் துருப்புகளின் அயுதக் கலைப்பையும் அவை கைப்பற்றிய பிரதேசங்களை விடுவிப்பதையும் துரிதப்படுத்தும் பொருட்டு சோவியத் யூனியனின் மார்ஷல் வசிலேவ்ஸ்கிய் மூன்று சேனைகளின் துருப்புகளுக்கும் பின்வருமாறு கட்டளை பிறப்பித்தார்; "ஜப்பானியர்களின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டு விட்டதாலும், சாலைகள் மோசமாக உள்ளதானது தம் முன் உள்ள கடமைகளை நிறைவேற்றும்போது நமது துருப்புகளின் பிரதான சக்திகள் விரைவாக முன்னேற தடையாக இருந்ததாலும் சன்சூன், முக்டன், கிரின், ஹார்பீன் ஆகிய நகரங்களை உடனடியாகக் கைப்பற்ற விசேடமாக உருவாக்கப்பட்ட விரைவாக முன்னேறும் நன்கு சாதனப்படுத்தப்பட்ட அணிகளை நடவடிக்கையில் ஈடுபடுத்த வேண்டும்"-கவச டாங்கிப் படைப் பிரிவுகளும் யூனிட்டுகளும் இந்த அணிகளின் அடிப்படையாக விளங்கின. அதே நேரத்தில் முக்டன், ஹார்பீன், கிரீன், சான்சூன், தால்னிய் துறைமுகம் பியென்யான், உட்பட வட கிழக்கு சீனாவின் மிகப் பெரும் நகரங்களில் ஆகஸ்டு 18 முதல் 22 வரை வான் இறக்குப்படைகள் இறக்கப்பட்டன. வான் இறக்குப் படையின் சுறுசுறுப்பான நடவடிக்கைகளின் பயனாய் பல இராணுவ-பொருளாதார கட்டுமானங்களை அழிவிலிருந்து காப்பாற்றவும் ஜப்பானியத் துருப்புகளின் சரணாகதியை துரிதப்படுத்தவும் முடிந்தது. முக்டன் விமானத் தளத்தில் ஜப்பானிய விமானம் ஒன்று இறக்குப் படையினரால் கைப்பற்றப்பட்டது. ஜப்பானுக்குத் தப்பியோடத் தயாராயிருந்த மஞ்யோவிகோ பொம்மை அரசின் பேரரசன் இதிலிருந்தான்.

ஆகஸ்டு 19 ஆம் திகதி குவாண்டுங் இராணுவ படைத் தலைமையகத் தலைவன் லெப்டினட் ஜெனரல் ஹாட்டா 1-வது தொலைகிழக்கு சேனையின் படைத் தலைமையகத் திற்குக் கொண்டு வரப்பட்டான். இவன் மூலம் தொலை கிழக்கிலிருந்து சோவியத் துருப்புகளின் பிரதான தளபதி மார்ஷல் வசிலேவ்ஸ்கிய் குவாண்டுங் இராணுவத் தளபதி ஜெனரல் யமாடாவிற்கு பின்வருமாறு காலக்கெடுவை அனுப்பினார். எல்லா இடங்களிலும் குவாண்டுங் இராணுவப் படைப் பிரிவுகளின் போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். எங்கே உடனடியாக போர் நடவடிக்கைகளை நிறுத்தும் கட்டளையைத் துருப்புகளுக்கு விரைவாகத் தெரிவிப்பது இயலாததோ அங்கே 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு 20 ஆம் திகதி நடுப்பகல் 12 மணிக்கு முன்னர் போர் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இதன் பின் போர் முனையின் கிட்டத்தட்ட எல்லா இடங்கிலிலும் ஜப்பானியத் துருப்புகள் ஆயுதங்களைக் கீழே போட ஆரம்பித்தன. தனிப்பட்ட சில குழுக்கள் மட்டுமே தொடர்ந்து எதிர்ப்பு காட்டின. இவற்றை சோவியத் படைப் பிரிவுகள் விரை விலேயே ஒழித்துக் கட்டின.

மஞ்சூரியாவில் நடைபெற்ற போர் நடவடிக்கைகளோடு கூட ஒரே நேரத்தில் 2-வது தொலை கிழக்கு சேனையின் துருப்புகள் பசுபிக் கடற்படையுடன் சேர்ந்து ஆகஸ்டு 11 முதல் 25 வரை தென் ஸ்காலீன் தாக்குதல் நடவடிக்கையையும் ஆகஸ்டு 18 முதல் செப்ரம்பர் 1 வரை குரீல் படையிறக்க நடவடிக்கையையும் மேற்கொண்டு தென் ஸ்காலீன் மற்றும் கிர்ரில் தீவுகளை ஜப்பானியத் துருப்புகளிடமிருந்து முழுமையாக விடுவித்தன. தென் ஸகாலீனில் 18000 ஜப்பானிய போர் வீரர்கள், இராணுவ அதிகாரிகளும் குரீல் தீவிகளில் 54,442 நபர்களும் சரணடைந்தனர்.

(தொடரும்)

அட்மிரல் சுசுக்கி-ஜப்பானின் இறுதிக்கட்ட யுத்தத்திற்கு தலைமை தாங்கியவர்



ஜப்பானின் வெளிநாட்டமைச்சர் ஷைஜினோரி ரோகோ-1945



ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சர் கொரிசிக்கா அனாமி-1945



ஜப்பானின் தூதுவர் நியாட்டேக் சேட்டோ 1945



ஜப்பான் சரணடைந்ததன்பின் தற்கொலை செய்து கொண்ட அந்நாட்டு இராணுவ அதிகாரி ரிஜிசி டனாகா

சரணடைவு நிகழ்வில் அமெரிக்க ஜெனரல் மைக்- காதர் பேசுகிறார்

இராணுவ ஜப்பானின் தோல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தளம் முற்றுகை;

5 கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்குத்தாக்கல்

மாங்கள சமரவீர எம்.பி. தாக்கல் செய்தார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ் இணையத்தளத்தின் அலுவலகம் குற்றப் புலன்ாய்வுப் பிரிவினால் முற்றுகையிடப்பட்டமை மற்றும் அதன் ஊழியர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர 5 கோடி ரூபா நட்டஈடு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா மிரர் இணையத்தளத்தின் உரிமையாளரும் பிரதம ஆசிரியருமான கெலும் ஷிவாந்த ரொட்ரிகோ, விளையாட்டுப் பிரிவு ஆசிரியர்களான ரந்திமா ஹிமாஷி கருணாரட்ன, தரந்து கௌஷல்ய, வார இறுதி செய்தி ஆசிரியர் சந்திம ஷிராந்தனி மானவடுகே, ஊடகவியலாளர் ரஜதேவா மஹோட்டி அஜித், அலுவல்க உதவியாளர் வீரகோன் பிரேமாவதி ஆகியோரும் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, பணிப்பாளர், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை, சமத்துவம் மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கான உரிமை, பேச்சு சுதந்திரத்தினதும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கான உரிமை, சட்டபூர்வமான எந்த தொழிலையும் செய்வதற்கான உரிமை ஆகியன பிரதிவாதிகளால் மீறப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜ.தே.கவின் தொடர்பாடல் பிரிவின் தலைவருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஏனைய மனுதாரர்களில் வீரகோன் பிரேமாவதி தவிர்ந்த ஏனையோர், எதேச்சதிகாரமான முறையில் கைது செய்யப்படாதிருத்தல், தடுத்து வைக்கப்படாதிருத்தல் ஆகிய உரிமைகளும் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்க கோரி மனுதாக்கல் செய்துள்ளனர்.

தமக்கு நட்ட ஈடாக 5 கோடி ரூபா வழங்கப்பட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணையை நிறுத்துமாறும் நீதவானுக்கு உத்தரவிடுமாறும் உயர் நீதிமன்றத்தை அவர்கள் கோரியுள்ளனர். (அ-2)

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வியட்நாம் விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நான்கு நாட்கள் பயணமாக வியட்நாமுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

அமைச்சர் பீரிஸ், வியட்நாம் வெளிவிவகார அமைச்சர் ஹாம்பின் மின்னை வியட்நாம் தலைநகர் ஹனோயில் வைத்து சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் இந்தப் பேச்சு வார்த்தையில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

நீதிமன்றங்களில் கடமையாற்றும் 53 பேரின் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

நாட்டின் நீதிமன்றங்களில் கடமையாற்றும் 43 புனர்வாழ்வு அதிகாரிகள் மற்றும் 10 மேற்பார்வையாளர்கள் பணிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

அமைச்சினால் நடத்தப்படும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு சமுகமளிக்காமையினாலேயே இவர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டவர்கள் மீது ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படும் பட்சத் தில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படு வார்கள் என்றார். (அ)

வேறு நாடுகளின் கட்சி அரசியலில் நோர்வே தலையீடு செய்யாது

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் கூட்டணியை ஏற்படுத்த முயற்சிக்கப்படவில்லை என நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது.

வேறு நாடுகளின் உள்விவகாரம் மற்றும் கட்சி அரசியலில் நோர்வே தலையீடு செய்யாது என அந்நாட்டுக்கான தூதரகம் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் அரசியல் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் நோர்வே, முனைப்புக் காட்டி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, இரு கட்சிகளுக்கும் இடையில் கூட்டமைப்பை ஏற்படுத்த நோர்வே தூதரகம் முயற்சி மேற்கொண்டமை உறுதி செய்யப்பட்டதாக ஆங்கில ஊடகமொன்று அண்மையில் தகவல் வெளியிட்டுள்ளது. இந்த விடயம் அரசாங்கத்திற்கும் தெரியும் என அந்த ஊடகம் மீளவும் தெரிவித்துள்ளது. (அ-2)

சிசுவை விற்றுவிட்டு காணவில்லையென பொலிஸில் புகார்- பெற்றோர் கைது

(கொழும்பு)

சிசுவை விற்க முயற்சித்த சிசுவின் தாய், தந்தை மற்றும் உதவியாளர் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மல்கஸ்வத்தை பகுதியைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் புத்தளம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று வீட்டில் இருந்த தனது குழந்தை கடந்த 13 ஆம் திகதி மாலை களவாடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தனது குழந்தையை வளர்க்க தகுதியற்று குறித்த நபர் சுய விருப்பத்துடன் மற்றொரு நபரின் உதவியுடன் பலபிட்டி பகுதியில் உள்ள தம்பதியினருக்கு விற்பனை செய்துள்ளார்.

குழந்தையை பெற்றுக் கொண்டவர்கள் பணம்கொடுக்கத்தவறியதால்புத்தளம்பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தனது சிசுவை காணவில்லை என குறித்த நபர் பொய் முறைப்பாடு செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொய் முறைப்பாடு செய்தமை, சிசுவை விற்க முயன்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் குறித்த நபரும் அவரது மனைவியும் உதவியாளரும் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிசு தற்போது புத்தளம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் இன்று புத்தளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

கருணாநிதியின் இரட்டை வேடத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன்

பழ.நெடுமாறன் அறிக்கை

இலங்கைப் பிரச்சினையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி இரட்டை வேடம் போடுவதாக இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

தமிழீழம் உருவாவதை விரைவில் காண வேண்டும் என்று கருணாநிதி அறிவித்திருந்தார். இதற்காகத்தான் டெசோ மாநாடு நடத்தப்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால், கருணாநிதி அறிவித்து 40 நாட்கள் ஆவதற்குள் அவர் பேச்சில் பொங்கி வந்த கோபம் மறைந்து விட்டது. டெசோ மாநாட்டில் தனிஈழக் கோரிக்கை தீர்மானம் நிறைவேற்றப்படாது என்று இப்போது கூறியுள்ளார்.

மத்திய அரசின் ஓர் அங்கமாக விளங்கும் தி.மு.க. செய்ய வேண்டியதைச் செய்து ஈழத் தமிழர்களின் துயரத்தை துடைக்காமல் இப்போது முச்சந்தியில் மாநாடு நடத்தி துயரைத் துடைக்கப் போவதாகக் கூறுவது பித்தலாட்டம். கருணாநிதியின் இரட்டை வேடத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தமிழருவி மணியன் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு,

5 முறை முதல்வராக இருந்த கருணாநிதி தமது பதவிக்காலத்தில் ஈழம் மலர வேண்டும் என்று உளப்பூர்வமாக ஒருபோதும் சிந்தித்தது இல்லை. இப்போதும் உலகத் தமிழர்களின் வெறுப்புப் பார்வை மட்டும்தான் கருணாநிதிக்கு எஞ்சியுள்ளது. மீண்டும் தெளிவற்ற அறிக்கைகள் மூலம் மிகச் சிறந்த குழப்பவாதி என்பதை கருணாநிதி நிரூபித்துள்ளார் என்றார்.

(அ-2)

ஈழமக்களை ஏமாற்றும் நோக்கிலேயே டெசோ மாநாடு நடத்தப்படுகிறது

இந்து மக்கள் கட்சி கண்டனம்

(தமிழகம்)

தனி ஈழத்தை வலியுறுத்தாத டெசோ மாநாடு தமிழ் மக்களை ஏமாற்றும் வேலை என்று கருணாநிதிக்கு இந்து மக்கள் கட்சியின் சார்பில் அதன் மாநில தலைவர் அர்ஜுன் சம்பத் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த மாநில தலைவர் அர்ஜுன் சம்பத் பேசியதாவது,

மேலும் கருணாநிதி நடத்தும் டெசோ மாநாடு தமிழ் மக்களை ஏமாற்றும் வேலை, அரசியல் ஆதாயத்திற்காக இலங்கை தமிழர்கள் மீது பாசம் கொண்டவராக கருணாநிதி வேசம் போடுகிறார்.

தமது குடும்பத்தினர்களுக்கும் தனது கட்சிக்காரர்களுக்கும் மத்திய அரசில் வருமானம் வரும் துறைகளை சுட்டிக்காட்டி அமைச்சர் பதவிகளை பெற்று தந்தவர் கருணாநிதி.

இலங்கையின் இராணுவத்திற்கு இந்திய இராணுவம் உதவி புரிந்ததை அன்றே தனது பலத்தை வைத்து நிறுத்தி இருந்தால் அப்பாவி தமிழர்கள் கொல்வதை தடுத்திருக்கலாம்.

தற்போது ஈழத் தமிழர்களை வாழவைக்கும் நோக்கில் டெசோ மாநாடு அறிவிக்கவில்லை. தமிழ் மக்களை ஏமாற்றும் எண்ணம் கொண்டு அறிவித்துள்ளார்.

டெசோ மாநாடு நடைபெறும் நாளில் இதனை கண்டிக்கும் வகையில் இந்து மக்கள் கட்சி சார்பில் வேலூரில் இந்து ஈழ ஆதரவு மாநாடு நடைபெறும். இதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி சென்னை, கோவை, திருச்சி போன்ற இடங்களில் இந்து ஆதரவு ஈழ மாநாடு ஏன் என்ற தலைப்பில் விளக்க பொதுக்கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி வழக்கிற்காக நீதிமன்றில் சந்திரிகா

காணி வழக்கொன்றிற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு சென்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் கணவரும் அரசியல்வாதியும் பிரபல நடிகருமான மறைந்த விஜயகுமாரதுங்கவிற்கு சொந்தமான சீதுவை முக்கலங்கமுவவில் உள்ள இரண்டு ஏக்கர் காணி தொடர்பான வழக்கில் தனது இரண்டு பிள்ளைகளின் சார்பாகவே அவர் நீதிமன்றத்திற்கு சென்றிருந்தார்.

குறித்த இரண்டு ஏக்கர் காணியை மறைந்த விஜயகுமாரதுங்கவின் தாயாரான பியட்ரிஸ் கிளேரா தனது பேரப்பிள்ளைகளான யசோதராகுமாரதுங்க மற்றும் விமுக்தி குமாரதுங்க ஆகியோருக்கு தனது இறுதி விருப்பப்பத்திரத்தில் எழுதி வைத்துள்ளார்.

தற்போது அந்தக் காணியின் ஒரு பகுதி கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த காணியின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமைக்கான இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்குமே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. (நு-8-11)

டெசோ மாநாட்டில் பங்கு கொள்பவர் குறித்து கவனமாக ஆராய்கிறோம்

த.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

டெசோ மாநாட்டில் பங்கு பற்றுவதா இல்லையா என்பது குறித்து கவனமாக ஆராய்ந்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதியின் ஏற்பாட்டில் இம்மாநாடுசென்னையில்எதிர்வரும்ஓகஸ்ட் 12 இல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறுகையில்,

இம்மாநாடு ஓகஸ்ட் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு போதிய கால அவகாசம் உள்ளது. இதுகுறித்து நாம் கவனமாக ஆராய்கிறோம். நாம் அவசரப்பட்டு தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என பதிலளித்தார்.

எனினும் தனக்கு வழங்கப்பட்டுள்ள அழைப்பிதழில் இம்மாநாடு இலங்கையில் தனி நாடொன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலென குறிப்பிடப்படவில்லை எனவும் இரா. சம்பந்தன் கூறினார். வடக்குக் கிழக்கில் போதிய சுயாட்சியுடனும் சுயமதிப்புடனும் சுய கௌரவத்துடனும் தமிழ் மக்கள் வாழ்வதற்காக உரிமைகள் குறித்த கலந்துரையாடல் என்றே அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

படைவீரர்களின் கருத்துக்களுக்கு எப்போதும் செவிமடுப்பேன்-ஜகத்

படைவீரர்களின் கருத்துக்களுக்கு எப்போதும் செவிமடுப்பேன் என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் கடமையாற்றிய சில இராணுவத் தளபதிகளைப் போன்று படைவீரர்களின் கருத்துக்களை உதாசீனம் செய்யவில்லை.

எந்த நேரத்திலும் தம்மை சந்தித்து தமது கருத்துக்களை வெளியிடப் படைவீரர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக படைவீரர்கள் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்படவில்லை எனவும் இது தொடர்பில் மகிழ்ச்சி அடைய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சுபீட்சத்திற்காக படையினர் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

படை அதிகாரிகள் அரசியலில் ஈடுபட எதிர்பார்க்க கூடாது எனவும் பதவியில் இருக்கும் அரசாங்கத்தை பாதுக்காக்க வேண்டியது படையினரின் பிரதான கடமையாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

பிச்சை எடுத்தமைக்காக 10 ரூபா அபராதம் விதிப்பு

கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் பிச்சையெடுத்தமைக்காக பிச்சைக்காரர்கள் 6 பேருக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் தலா 10 ரூபா அபராதம் விதித்தது.

இவர்கள் கொள்ளுப்பிட்டிபொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவை இவர்கள் மீறியுள்ளதாக பொலிஸார் குற்றம் சுமத்தினர்.

மேற்படி அறுவரும் தாம் குற்றவாளியென ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்கு நீதவான் கனிஷ்க விஜேரட்ன தலா 10 ரூபா அபராதம் விதித்தார்.

மீண்டும் இவ்வாறான நடத்தையில் ஈடுபடாதிருக்குமாறும் மீண்டும் குற்றவாளியாக காணப்பட்டால் அவர்கள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் நீதவான் எச்சரித்தார். (அ-2)

இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.07 19

★ 1545-இங்கிலாந்தின் மேரி றோஸ் என்ற போர்க் கப்பல் போர்ட்ஸ் மவுத் என்ற இடத்தில் மூழ்கியதில் 35 பேர் மட்டும் தப்பினர்.

★ 1553- 9 நாட்களே இங்கிலாந்தின் அரசியாக இருந்த ஜேன் கிறே பதவியிழந்தாள். முதலாம் மேரி அரசியாக முடிசூடினாள்.

★ 1870-பிரான்ஸ் புரூசியா மீது போரை ஆரம்பித்தது.

★ 1900-பாரிசில் முதலாவது சுரங்கத் தொடருந்து சேவை ஆரம்பமாகியது.

★ 1912-அரிசோனா மாநிலத்தில் 190 கிலோ எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்து கிட்டத்தட்ட 16 ஆயிரம் துகள்களாகச் சிதறுண்டது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: இத்தாலியப் போர்க் கப்பல் ஒன்று மூழ்கியதில் 121 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1947-பர்மிய தேசியவாதியான ஓங்சான் மற்றும் அவரது 6 அமைச்சர்கள் கொல்லப்பட்டனர்.

★ 1967-வட கரோலினாவில் போயிங் 727 மற்றும் செஸ்னா 310 விமானங்கள் நடுவானில் மோதியதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1979-நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு சமோசா அரசு சண்டினீஸ்டா கிளர்ச்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டது.

★ 1980-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொஸ்கோவில் ஆரம்பமாகின.

★ 1985-இத்தாலியில் அணைக் கட்டு ஒன்று இடிந்ததில் 268 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1996-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அட்லாண்டாவில் ஆரம்பமாகின.

பிறப்புக்கள்

★ 1827-மங்கள் பாண்டே, சிப்பாய்க் கிளர்ச்சியை ஆரம்பித்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பாய் (இ.1857)

★ 1979-மாளவிகா, தமிழ்த் திரைப்பட நடிகை

இறப்பு

★ 1947-சுவாமி விபுலாநந்தர், தமிழிசை ஆய்வாளர் (பி.1892)



சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892- யூலை 19, 1947) கிழக்கிலங்கையில் பிறந்த தமிழ் அறிஞர்.

இவரின் இயற்பெயர் மயில்வாகனன். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவில் பிறந்தார்.

இவருடைய ஆரம்பக் கல்வி கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் இடம்பெற்றது.

கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகச் சில காலம் பணி புரிந்து, அதன் பின் கொழும்பில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராய் இருந்த தென்கோவை கந்தையாபிள்ளையிடம் பண்டையதமிழ் இலக்கியத்தை கற்றார்.

மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக 2 ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் 1916-ம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டத்தை பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் தோற்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன் முதல் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே.

கொழும்பு அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார். அத்துடன் 1920-ம் ஆண்டு லண்டன் பல்கலைக் கழகம் நடத்திய BSc தேர்வில் தோற்றி சித்தியடைந்தார். மயில்வாகனனாரின் மொழிப் புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக *யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்* என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார்.

மனதை ஈர்த்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி இராமகிருஷ்ண மிஷனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார். 2 வருடங்கள் அங்கு பயின்ற அவர் இராமகிருஷ்ண மிஷன் நடத்திய இராமகிருஷ்ண விஜயம் என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும் வேதாந்த கேசரி என் ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார்.

1924-ம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலாநந்தர் என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. அதன்பின் அவர் இலங்கை திரும்பி இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

செட்டி நாட்டரசர் வேண்டுகோளின்படி சுவாமி விபுலாநந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். அக்காலப் பகுதியில்தான் அவருடைய இசை சம்பந்தமான ஆராய்ச்சி ஆரம்பமாகியது. புராதன தமிழர் இசை பற்றி அவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 1934 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பதவியில் இருந்து விலகி இலங்கை திரும்பிய அடிகளார் இங்கு இராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்டு வந்த கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இராமகிருஷ்ண மிஷன் இமயமலைப் பகுதியில் உள்ள மாயாவதி ஆசிரமத்தில் இருந்து வெளியிடும் பிரபுத்த பாரத என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934 ஆம் ஆண்டு விபுலானந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அப்போதுதான், இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப் பெற்று, அரிய நூலாகிய யாழ் நூல் உருவாக்கம் பெற்றது.

1943-ம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளுக்கிணங்க பணிபுரிய இணங்கினார்.

தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்ல வேண்டும் என்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார் என்பது நினைவில் இருக்கத்தக்கது.

யாழ் நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் உடல் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். 1947-ம் ஆண்டு ஆடி 19-ம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலானந்தர் இறந்தார். அவரது உடல், மட்டக்களப்பில் அடக்கம் செய்யப்பட்டது.

ஈழத்து மக்களுக்கு இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கை அரசு தேசிய வீரர் வரிசையில் ஒருவராக இவரைச் சேர்த்துள்ளது. அத்துடன் நாட்டில் உள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலங்கை தமிழ் மொழி தினம் இவரது மறைவு தினமான அன்றே கொண்டாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெசோ மாநாடு...!

யாருக்கு யார் வைக்கும் 'செக்'

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர் விவகாரத்தை வைத்து நடத்தப்படும் அரசியல் இப்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்

கருணாநிதி சொன்ன சொல்லைக் காப்பாற்றுவாரா...?

ளது.

அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 12 ஆம் திகதி சென்னையில் தி.மு.க. சார்பில் நடத்தப்படவுள்ள ஈழத் தமிழர் ஆதரவு அமைப்பு மாநாட்டுடன் (டெசோ) இது இன்னும் உச்சத்தை தொடப்போகிறது.

ஒரு பக்கத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி டெசோ மாநாட்டை நடத்துவதற்கான முனைப்பில் இறங்கியிருக்க, இன்னொரு பக்கத்தில் மத்திய உள்துறை அமைச்சு புதிய குண்டு ஒன்றைத் தூக்கி போட்டுள்ளது. இதன் காரணமாக டெசோ மாநாடு நடக்குமா?- அதை நடத்துவதற்கு மத்திய, மாநில அரசுகள் அனுமதிக்குமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

டெசோ உருவாக்கம்

ஈழத்தமிழர் ஆதரவு அமைப்பு என்ற டெசோ அமைப்பு 1980 களின் தொடக்கத்தில் உருவாக்கப் பட்டது. அதாவது, இலங்கையில் தமிழ் இயக்கங்களின் தனிநாடு கோரிய ஆயுதப் போராட்டத்துக்கு வலுச்சோப்பதற்காக- தமிழீழத்தை உருவாக்குவதற்கு தமிழ் நாட்டில் துணை நிற்பதற்காகவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

கருணாநிதி, நெடுமாறன், வீரமணி உள்ளிட்ட பல தமிழக அரசியல் தலைவர்கள் இதில் அங்கம் வகித்தனர். ஆனால், அப்போதைய தமிழ்நாடு முதல்வர் எம்.ஜி.ஆர். அதில் பங்கேற்க வில்லை.

எனினும், அவர் விடுதலைப் புலிகளை ஆதரித்து வந்தார். கருணாநிதியோ ரெலோவை தன் கைக்குள் வைத்திருந்தார்.

ரெலோவை தடைசெய்த விடுதலைப்புலிகள், அதன் தலை வரான சிறிசபாரட்னத்தை கொன்றதை அடுத்து கருணாநிதி திடீரென டெசோ அமைப்பையும் கலைத்துவிட்டார்.

அண்மையில் கருணாநிதியின் குடும்பத்துக்குள் கலகம் தீவிரமானபோது, அவர்கள் மீண்டும் டெசோவை உருவாக்கி, அதன் மூலம் தனது பிரச்சினைகளை சமாளிக்கத் திட்டமிட்டார்.

அத்துடன் அவருக்கு வயதாகி விட்டதால், இறுதிக்காலத்தில் நல்ல பெயரெடுக்க வேண்டும் என்ற ஆவலும் இருப்பதாகத் தெரிகிறது.

மீண்டும் துளிர்த்த கனவு

அதனால்தான் அவர் இப்போது தமிழீழத்தைப் பார்த்துவிட்டே கண் மூடுவேன் என்கிறார். அவர் காண விரும்பும் தமிழீழத்தை உருவாக்குவதற்காக கருணாநிதி நடத்தப் போகும் மாநாடுதான் டெசோ மாநாடு.

முன்னர் இந்த மாநாடு வரும் ஆகஸ்ட் 5 ஆம் திகதி விழுப்புரத்தில் நடக்கும் என்று அறிவிக்கப் பட்டது. பின்னர், திடீரெனச் சென்னைக்கு மாற்றப்பட்டது. காரணம் வெளிநாட்டில் இருந்து வருவோருக்கு தங்குவதற்கும், பயணம் செய்வதற்கும் விழுப்புரம் ஏற்ற இடமில்லையாம்.

இந்த மாநாட்டில் பங்கேற்கு மாறு வெளி நாட்டில் உள்ள புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளையும், இலங்கையில் இருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருணாநிதி நேரடியாகவே அழைப்புக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

எனினும், ஆகஸ்ட் 12 ஆம் திகதி சென்னையில் கருணாநிதி நடத்தப்போகும் டெசோ மாநாடு இரண்டு தரப்பினருக்குப் பிடிக்க வில்லை.

முதலாவது, ஜெயலலிதா தரப்பு. இரண்டாவது, இந்திய மத்திய அரசு.

ஜெயலலிதாவின் அச்சம்

டெசோ மாநாட்டை நடத்துவதன் மூலம் கருணாநிதி மீண்டும் தனது செல்வாக்கை வளர்த்து விடுவாரோ என்ற பயம் ஜெயலலிதாவுக்கு இருப்பதில் நியாயம் உள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப்போரும், போருக்குப் பிந்திய சூழலும் தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர் விவகாரத்தைச் சூடுபிடிக்க வைத்துள்ளது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் வரப்போகும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலிலும் இது எதிரொலிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எனவே, கருணாநிதி தனது கை ஓங்குவதற்கு இந்த டெசோ மாநாட்டைப் பயன்படுத்திவிடக் கூடாது என்பதில் ஜெயலலிதா அக்கறையோடு இருப்பார்.

அதனால்தான், தாம்பரம் விமானப்படைத் தளத்தில் பயிற்சி பெற்ற இலங்கைப் படையினர் அங்கிருந்து மட்டுமன்றி, இந்தியாவில் இருந்தே வெளியேற்றப்பட வேண்டும் என்று உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

ஆனால், டெசோ மாநாட்டை கருணாநிதி நடத்திவிட்டால், அதை வைத்து அவர் அரசியல் இலாபம் தேட முனைவார் என்பது ஜெயலலிதாவின் பயம்.

மாநாட்டை இரசிக்காத மத்திய அரசு

அதே வேளை, கருணாநிதி மீண்டும் டெசோவைத் தொடங்கியுள்ளதையோ, அவர் தமிழீழத்தை உருவாக்கப்போகிறேன் என்று கூறுவதையோ இந்திய மத்திய அரசும் இரசிக்கப் போவதில்லை.

இந்த விவகாரம் கருணாநிதிக்கு தான் அரசியல் ஆதாயத்தைத் தேடிக் கொடுக்கும் என்பதாலும், தனிநாட்டுக் கோரிக்கை மீதான அதன் அடிப்படை வெறுப்பினாலும் இந்திய அரசு இதை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை.

இலங்கையில் தமிழீழம் அமைவதை இந்தியா தனக்கான அச்சுறுத்தலாகவே பார்க்கிறது. அதுவும் தமிழ் நாட்டின் துணையுடன் தனிநாடு ஒன்று அமைவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது. இருந்தாலும் கருணாநிதி டெசோவை மீண்டும் கையில் எடுத்துள்ளதை, காங்கிரஸ் அரசு வெளிப்படையாக எதிர்க்கவில்லை.

காரணம், முன்னரைவிட தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் இடையிலான உறவுகள் இப்போது நல்ல நிலையில் இருப்பதுதான். ஸ்பெக்ரம் ஊழல் வெளிச்சத்திற்கு வந்தபோது, இருதரப்பு உறவுகள் மோசமான கட்டத்தில் இருந்தன.

அப்போது தி.மு.க. வை மத்திய அரசு கிள்ளுக்கீரையாகவே பார்த்தது. இல்லாவிட்டால், இராசாவோ, கனிமொழியோ மாதக்கணக்கில் கம்பியெண்ண வேண்டிய நிலை வந்திருக்காது.

இப்போது காங்கிரஸ் அமைச்சர்கள் பலர் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ளதால், தி.மு.க. வின் ஊழல் பெரிய விடயமாகத் தெரியவில்லை.

ஜெயலலிதாவின் அடுத்த இலக்கு

காங்கிரசைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் தி.மு.க. அல்லது அ.தி.மு.க.வின் முதுகில் சவாரி செய்வதுதான் அதன் வழக்கம். இல்லையேல், காங்கிரசால் தனித்து ஒரு ஆசனத்தைக் கூட வெல்ல முடியாது.

அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையில், இப்போதைக்கு காங்கிரசின் பக்கம் வர வாய்ப்பில்லை. ஜெயலலிதாவின் அடுத்த இலக்கு காங்கிரசுடன் இணைவதல்ல. புதுடெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது தான்.

அதாவது, அவர் இலக்குவைப்பது பிரதமர் பதவியை. தனது சொங்கோட்டைக் கனவு பற்றி வெளிப்படையாகவே அவர் கூறியும் உள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சங்மாவை நிறுத்தியதுகூட, தான் கிங்மேக்கராக உருவெடுக்கிறேன் என்பதை வெளிப்படுத்துவதற்குத்தான்.

காங்கிரசுடன் இணைந்தால், ஒருபோதும் செங்கோட்டைக் கனவு நனவாக வாய்ப்புக் கிடைக்கப் போவதில்லை. எனவே காங்கிரஸ் பக்கம் அவர் வரமாட்டார்.

காங்கிரசுக்கு வேறு கதி இல்லை. எனவே, காங்கிரசுக்கு இப்போது ஒரே கதி தி.மு.க. தான். அதையும் விட்டால் வேறு வழியில்லை.

எனவே காங்கிரஸ்- தி.மு.க. உறவுகள் மீண்டும் பலமடைந்துள்ளதில் ஆச்சரியம் இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தமிழர்களின் கருணை மனுவை ஏற்க முகர்ஜியைக் கோருங்கள்

நாம் தமிழர் கட்சி தி.மு.கவிடம் கோரிக்கை

ஈழத்தில் தமிழினத்தை அழித்தொழித்த இனப் படுகொலைப் போரின் சூத்ரதாரியாக செயற்பட்டது மட்டுமின்றி அந்தப் போரின் போது இலங்கை அரசிற்கு ஆயுதங்கள் வழங்குவதையும் நியாப்படுத்தி பேசியவர் பிரணாப் முகர்ஜி. அயலுறவு அமைச்சராக பிரணாப் முகர்ஜி இருந்தபோதுதான் கச்சதீவு கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் மீது பலமுறை இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியது என நாம் தமிழர் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழினத்தின் உரிமைகளைப் பற்றி சிறிதும் கவலைப்படாத தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத பிரணாப் முகர்ஜிக்குத்தான் தாங்களே தமிழினத்திற்கு அரணாக இருப்பவர்கள் என்று கூறிக் கொள்ளும் தி.மு.க. முதலில் முன்வந்து ஆதரவு அளித்துள்ளது.

தமிழ் நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியான தே.மு.தி.க., புதிய தமிழகம், தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம், சமத்துவ மக்கள் கட்சி ஆகியனவும் பிரணாப் முகர்ஜிக்கு வாக்களிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

பிரணாப் முகர்ஜிதான் இந்தியாவின் அடுத்த குடியரசுத் தலைவர் என்று உறுதியாகி விட்ட நிலையில் அவரிடமிருந்து தி.மு.க. தலைவர் கருணாநிதியும் அவருக்கு வாக்களிக்கப் போவதாக அறிவித்துள்ள தமிழ் நாட்டின் மற்ற சட்டமன்றக் கட்சிகளும் ஒரு வாக்குறுதியைப் பெற வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி கேட்டுக்கொள்கின்றது.

ராஜீவ் கொலை வழக்கில் அநியாயமாக மரண தண்டனை விதிக்கப்பட்டு கடந்த 22 ஆண்டுகளாக சிறையில் வாடிவரும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூன்று பேரின் கருணை மனுவை ஏற்று அவர்களை மரண தண்டனையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று பிரணாப் முகர்ஜியுடன் இருந்து ஒரு வாக்குறுதியை இக்கட்சிகள் பெற வேண்டும்.

இவர்களின் கருணை மனுக்களை மறுபரிசீலனை செய்து அவர்களின் தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய போது அதற்கு ஆதரவாக நின்ற இந்தக் கட்சிகள் இப்போது அதற்கான வாக்குறுதியை பெறுவதே சரியான அரசியல் அணுகுமுறையாக இருக்கும்.

இப்படியொரு வாக்குறுதியை பெற்ற பின்னர் பிரணாப் முகர்ஜிக்கு வாக்களித்தால் அது தமிழர்களின் இன உணர்வை பிரதிபலிப்பதாக இருக்கும்.

தமிழின உரிமைப் போராட்டங்களும் தமிழரின் அரசியலும் வேறுபட்டதல்ல என்பதை டில்லி தலைவர்களுக்கு உணர்த்துவதாகவும் இருக்கும் என அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

நாட்டின் பத்து அரசியல் கட்சிகளுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் கிடைக்கின்றன

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட 60 அரசியல் கட்சிகளில் 10 அரசியல் கட்சிகளுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் கிடைப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இவற்றில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணிக்கு வெளிநாடுகளில் இருந்து 36 இலட்சத்து 7 ஆயிரத்து 54 ரூபா கிடைத்து வருவதுடன் பத்மநாப அணியான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு வருடாந்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா கிடைக்கிறது. ஈழவர் ஜனநாயக முன்னணிக்கு 8 இலட்சம் ரூபா அந்த கட்சியின் ஐரோப்பிய உறுப்பினர்களிடம் இருந்து கிடைக்கின்றது.

இதனைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் கட்டணமாக 2011 ஆம் ஆண்டு 49 ஆயிரத்து 500 ரூபா கிடைத்தது. ஜனசெத முன்னணிக்கு 22 ஆயிரத்து 800 ரூபா கிடைத்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு 2010 ஆம் ஆண்டில் 5 இலட்சம் ரூபாவும் தேசிய சுதந்திர முன்னணிக்கு 2010 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் (அரசியல் பிரிவு) 5 இலட்சத்து 93 ஆயிரத்து 500 ரூபாவும் வெளிநாடுகளில் இருந்து கிடைத்துள்ளன.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் உட்பட 43 கட்சிகளுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் கிடைத்து வருகின்றது என்பது தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை. நான்கு அரசியல் கட்சிகள் தமது கணக்காய்வு அறிக்கையை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவில்லை என்றார். (அ-2)

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற இரத்ததான நிகழ்வின் போது...

தமிழ் மக்களின் உணர்வுகளை உலகிற்கு எடுத்துச் செல்லும் பணி வீழ்ச்சியடைந்துள்ளது

மனோ கணேசன் தெரிவிப்பு

அடிக்கு அடி இராணுவ பிரசன்னம் இருக்கம் யாழ்.குடாநாட்டில் வீடுகள் தாக்கப்படுவதும் கழிவு எண்ணெய் வீசி எச்சரிக்கப்படுவதும் எவரால் நடத்தப்படுகின்றன என்பதை ஊகிப்பது கஷ்டமானது அல்ல. இந்த பின்னணியில் கழிவு எண்ணெய் ஊற்றி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டத்தை அரசு இன்றே ஆரம்பித்து வைத்துவிட்டதென ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் இரண்டு பிரதான பிரச்சினைகளை உலகின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் இந்த ஜனநாயக போராட்டம் உலகை தட்டி எழுப்ப வேண்டும். மக்களுடன் இணைந்து தமிழ் மற்றும் முற்போக்கு கட்சிகள் இந்த போராட்டத்தில் அணிதிரண்டு கலந்துகொள்ள வேண்டும்.

தமிழ்மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளின் பட்டியல் நீண்டது. இந்த பட்டியலில் இரண்டு பிரதான பிரச்சினைகள் உள்ளன.ஒன்று அரசியல் கைதிகளின் பிரச்சினை ஆகும். இந்த பிரச்சினை இன்று நிமலரூபனின் படுகொலையுடன் அம்பலத்துக்கு வந்துவிட்டது. அடுத்த பிரதான பிரச்சினை தமிழ் மக்களின் பாரம்பரிய நிலம் அபகரிக்கப்படுவதாகும்.மண் அபகரிப்புக்கு எதிரான தமிழ் மக்களின் மன உணர்வுகளை உலகின் கவனத்திற்கு அழுத்தமாகக் கொண்டு செல்லும் பணியினை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்திருந்தது.

இந்தப் போராட்டம் இன்று வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்நிலையில் தற்போது மண் அபகரிப்பு பிரச்சினையுடன் இணைந்து அரசியல் கைதிகள் பிரச்சினையையும் முன் னெடுக்கும் முகமாக இந்த ஜனநாயக போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்தப் போராட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி கலந்து கொண்டு உறுதியான பங்களிப்பை வழங்கும். (அ-2)

மீண்டும் ஆரம்பமாகின்றது! குறைந்த கட்டணத்திலான பொதிகள் சேவை



கடந்த 5 வருடங்களாக யாழ். மண்ணில் உன்னதமான சேவையை வழங்கி வந்த Rainbow Travels தனது சேவையை மீண்டும் யாழ். மண்ணில் ஆரம்பித்துள்ளது. உள்ளூர், வெளிநாடுகளுக்கான ஆகாய,கடல் மார்க்கமான துரித கடிதங்கள், ஆவணங்கள், பொதிகள் சேவையை பெற்றுக் கொள்ளலாம்.

- லண்டன் 1Kg 1500/- மேலதிக ஒவ்வொரு கிலோவிற்கும் 1000/- மட்டுமே
- கனடா 1Kg 2600/- மேலதிக ஒவ்வொரு கிலோவிற்கும் 1400/- மட்டுமே

குறிப்பு:- துரித சேவை 3Kg விற்கு
லண்டனிற்கு 1Kg 500/- மட்டுமே
கனடாவிற்கு 1Kg 600/- மட்டுமே

7 நாட்களிற்குள் கிடைக்கக்கூடியதான சேவையை வழங்கிவருகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-
Rainbow Travels
No. 30/2 Third Lane,
Power House Road, Jaffna.
T.P:- 021 221 9596

(சி-556)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பீர்பால் கதைகள்

குளிர்காலத்தின் ஒரு குளிர்ந்த நாள் அது. யமுனை நதிக்கரையோரமாக மன்னர் அக்பர் பீர்பாலுடன் மெதுவாக உலா சென்று கொண்டிருந்தார்.

அவர் தண்ணீரைப் பார்த்த போது அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

இந்நகரில் உள்ள யாராவது இந்தக் குளிர்ந்த யமுனை நதியில் தங்கள் கழுத்து வரை தண்ணீரில் அமிழ்ந்து நிற்பார்களா? என எனக்குத் தெரிய வேண்டும்! என்று அக்பர் கூறினார்.

அவ்வாறு அவர்கள் செய்தால் நான் அவர்களுக்கு 200 வெள்ளி நாணயங்களைத் தருகிறேன்! என்றும் சொன்னார்.

பீர்பால் அரண்மனைத் தூதுவர்களைக் கண்டு மன்னரது சவாலைப் பற்றிக் கூறி அதனை நகரிலுள்ள பொதுமக்களிடம் தெரிவிக்கச் சொன்னார்.

பலர் இச் சவாலை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஆனால், ஒரு ஏழை இருந்தான். அவனுக்குப் பணம் மிக அவசியமாகத் தேவைப்பட்டது.

அவன் அரண் மனைக்குச் சென்று தான் ஒரு இரவு முழுவதும் குளிர் ந்த தண்ணீரில் நிற் பதாக மன்னரிடம் கூறினான்.

அக்பர் உடனே இரண்டு காவலா ளர்களைக் கூப்பிட்டு அம் மனிதனை எல்லா நேரமும் கண் காணிக்கக் கூறினார்.

அதிகாலை ஆனவுடன் அக்பரிடம் அவனை அழை த்துச் சென்றனர்.

நான் வைத்த சோதனையில் நீ ஜெயித்து விட்டாய்.

காவலாளர்களே! இவன் தன் கழுத்து வரை நீரில் அமிழ்ந்து இருந்தானா? அக்பர் கேட்டார்.

ஆமாம்! பாதுஷாவே என அவர்கள் மரியாதையுடன் பதில் கூறினர்.

சரி, இப்பொழுது சொல் நீ இரவு முழுவதும் தண்ணீரில் நிற்கையில் உன்னிடம் ஏதேனும் கருவி உதவிக்கு இருந்ததா? அக்பர் அந்த ஏழையிடம் கேட் டார்.

வெகு தூரத்திலுள்ள அரண்மனை விளக்குகள் எனக்கு வெதுவெதுப்பைத் தருவதாக எண்ணிக்கொண்டு நான் குளிர்ந்த யமுனை நதியில் நின்றிருந்தேன் என்று அவன் பதிலளி த்தான்.

அப்படியென்றால் நீ என்னை ஏமாற்றி விட்டாய்! உனக்கு நான் அன்பளிப்பைத் தர்மாட்டேன்.

இங்கிருந்து போய்விடு! என்று அக்பர் கூறினார்.

அந்த ஏழை மனிதன் மன்னரின் பதிலைத் தேடு

விளக்கின் வெப்பம்

ஆச்சரியப்பட்டான். ஆனால், அவரிடம் வாதாடவும் பயந்தான்.

அதனால் அவன் சோகத் தோடு சென்று விட்டான். அப்போது அவனுக்குப் பீர்பாலின் நினைவு வந்தது.

எனக்கு உதவி புரியுமாறு நான் பீர்பாலிடம் கேட்கி றேன்! என்று தீர்மானித்து பீர்பாலிடம் சென்றான்.

அவன் நடந்த அனைத் தையும் பீர்பாலிடம் கூறினான்.

கவலைப்படாதே! மன்னர் உனக்கே அன்பளிப்பை அளிக்குமாறு நான் பார்த்துக் கொள்கிறேன்! என்று பீர்பால் கூறி அவனை அனுப்பி வைத்தார்.

மறுநாள் காலை அக்பர் வேட்டைக்குச் செல்ல தீர்மானம் செய்தார்.

அவர் பீர்பாலிடம் ஒரு தூதுவனை அனுப்பி அவரையும் உடன் வருமாறு கூறச் சொன்னார்.

சிறிது நேரம் கழித்து அத் தூதுவன் திரும்பி வந்தான்.

பீர்பால் அவர்கள் கிச்சடி சமைப்பதாக உங்களிடம் கூறச் சொன்னார்.

மேலும் அவர் சமைத்து முடித்தவுடன் வருவதாகக் கூறினார். தூதுவன் இவ்வாறு அக்பரிடம் கூறினான்.

அக்பர் சிறிது நேரம் காத்திருந்தார். ஆனால் பீர்பால் வரவே இல்லை.

எவ்வளவு நேரம் நான் காத்திருக்க! நான் சென்று பீர்பால் அவ்வளவு பிரமா தமாக என்ன சமைக்கிறான் எனப் பார்த்துவிட்டு அவன் வராவிடில் நான் அப்படியே வேட்டைக்கு புறப்பட்டு விடுகிறேன்! இவ்வாறு கூறி அக்பர், பீர்பாலின் வீட்டுக்குக் புறப்பட்டார்.

பீர்பாலின் வீட்டுத் தோட்டத்தை அடைந்த அக்பர், சற்று நின்று அங்கு நடப்பவற்றைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

பீர்பால் சிறிது நெருப்பை மூட்டியிருந்தார்.

அதன்மேலே உயரத்தில் இருந்த மரக்கிளையில் ஒரு சட்டியைத் தொங்கவிட்டி ருந்தார்.

என்ன பீர்பால்! இது தான் நீ கிச்சடி செய்யும் அழகா? எப்படி இந்தச் சிறிய அளவு நெருப்பு வெகு உயரத்தில் இருக்கும் பானையைச் சூடாக்கும்? என அக்பர் பீர்பாலைக் கேலி செய்தார்.

ஏன் நடக்காது பாதுஷாவே! வெகு தொலைவில் இருக்கும் அரண்மனை விளக்குகள் குளிர்ந்த யமுனை நதியில் நிற்கும் மனிதனுக்கு வெதுவெதுப்பைத் தரும் போது, இது ஏன் நடக்காது என பீர்பால் பதிலளித்தார்.

உடனே அக்பர் அந்த ஏழையிடம் கூறியவற்றை நினைத்தார்.

தன் காவலாட்களிடம் உடனே சென்று அவனைக் கூட்டிவர ஆணையிட்டார்.

என்னுடைய தவறான தீர்ப்பை சுட்டிக் காட்டி யதற்கு மிகவும் நன்றி பீர்பால் என்று அக்பர் தனது அரண்மனைக்குத் திரும்பி யவுடன் பீர்பாலிடம் கூறினார்.

அவர் அம்மனிதனுக்கு 200 வெள்ளி நாணயங்க ளோடு வேறு பல பரிசுகளையும் அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்பை தாக்குதல் விசாரணை அறிக்கையை பாகிஸ்தான் நீதிமன்றம் நிராகரித்தது

இந்தியாவுக்கு பின்னடைவு

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதல் வழக்கு தொடர்பான பாகிஸ்தான் விசாரணை குழுவின் அறிக்கை சட்டவிரோதமானது என்று ராவல்பிண்டி நீதிமன்றம் அறிவித்துள்ளது. இது இந்தியாவுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

மும்பை நகரில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10 பேர் கடல் வழியாக ஊடுருவி பத்து இடங்களில் பயங்கர தாக்குதல்கள் நடத்தி 166 பேரை கொன்று குவித்தனர்.

இந்த சம்பவத்தின்போது அஜ்மல் கசா என்ற தீவிரவாதி மட்டும் உயிருடன் பிடிபட்டான். அவன் மீதான வழக்கை மும்பை தனி நீதிமன்றம் விசாரித்து மரண தண்டனை விதித்தது. அதை மும்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

மும்பை தாக்குதல்கள் தொடர்பாக பாகிஸ்தானில் ராவல்பிண்டி நகரில் அமைந்துள்ள தீவிரவாத தடுப்பு நீதிமன்றிலும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகின்றது. இந்த வழக்கில் மும்பை தாக்குதலில் மூளையாக செயற்பட்டு பின்னின்று நடத்திய லஸ்கர் இ தொய்பா தளபதி ஜாகிர் ரகுமான் லக்வி உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள ஒரு உடன்பாட்டின் படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய பாகிஸ்தான் தீவிர விசாரணை குழுவுக்கு அனுமதி இல்லை என இந்திய அதிகாரிகள் கூறிவிட்டனர். இருப்பினும் குறுக்கு விசாரணை நடத்தாமல் தீவிர விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை ராவல்பிண்டி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

பாகிஸ்தான் தீவிரவிசாரணை குழுவின் அறிக்கை செல்லாது என அறிவிக்கக்கோரி ஜாகிர் ரகுமான் லக்வி ராவல்பிண்டி நீதிமன்றில் ஒரு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு விசாரணைக்கு வந்தபோது அரசு தலைமை வக்கீல் ஜூல்பிகார் அலி சவுத்ரி இந்தியாவில் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடத்த அனுமதி பெற்று மற்றொரு குழுவை மும்பைக்கு அனுப்பி வைக்கலாம் என யோசனை கூறினார்.

இந்த நிலையில் ஜாகிர் ரகுமான் லக்வியின் மனு நீதிபதி ஹகீ உர் ரகுமான் சவுத்ரி முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது அவர் பாகிஸ்தானிய தீவிர விசாரணை குழுவின் நடவடிக்கைகள் அறிக்கை அனைத்தும் செல்லாது அவை சட்டபூர்வமானது அல்ல என ஒரு பரபரப்பு உத்தரவினை பிறப்பித்தார்.

மேலும் இந்தியாவில் சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை நடத்த வழிவகுத்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே புதிய உடன்பாடு ஏற்பட்டால் மற்றொரு குழுவினை மும்பைக்கு அனுப்பி வைப்பது குறித்து அரசுதரப்பில் நீதிமன்றத்தை அணுகலாம் எனவும் உத்தரவிட்டார்.

இதுகுறித்து ஜாகிர் ரகுமான் லக்வியின் வக்கீல் கவாஜா ஹரிஷ் அகமது கூறியதாவது,

விசாரணை குழுவின் அறிக்கை சட்டவிரோதமானது என நீதிபதி அறிவித்துள்ளார். இந்த அறிக்கை மும்பை தாக்குதல் வழக்கு விசாரணையில் ஆவணமாக சேர்க்கப்படமாட்டாது என அறிவித்துள்ளார்.

நீதி விசாரணை குழுவின் நடவடிக்கைகள் அறிக்கை சரியானதா என்பது குறித்து பரிசீலிக்கிற அதிகாரம் நீதிமன்றத்துக்கு உள்ளது. அதில் இப்போது நீதி விசாரணை குழுவின் அறிக்கை சரியான படிக்கு இல்லை என கூறப்பட்டுள்ளது. விசாரணை குழுவின் அறிக்கை வழக்கில் சாட்சியமாக சேர்க்கப்படாது என அவர் கூறினார்.

பாகிஸ்தான் விசாரணை குழு அறிக்கை சட்டவிரோதம். அதன் செயற்பாடுகள் அறிக்கை எதுவுமே செல்லாது என அந்த நாட்டு நீதிமன்றால் அறிவிக்கப்பட்டிருப்பது மும்பை தாக்குதல் வழக்கில் இந்தியதரப்பில் பெருத்த பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. மும்பை தாக்குதல்கள் தொடர்பாக பாகிஸ்தானுக்கு ஒரு குழுவினை அனுப்பி வைக்க இந்தியா திட்டமிட்டிருந்ததிலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

இந்தியா- பாகிஸ்தான் அதிகாரிகள் சந்திப்பு

இந்திய -பாகிஸ்தான் அதிகாரிகள் இஸ்லாமாபாத்தில் சந்தித்துப் பேச உள்ளனர். இச்சந்திப்பு இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

இந்தியக் குழுவுக்கு வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல் செயலர் வை. கே.சின்ஹாவும் பாகிஸ்தான் குழுவுக்கு அந்நாட்டு வெளியுறவு அமைச்சக இயக்குநர் சேரா அக்பரியும் தலைமை தாங்குவர். எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டையொட்டி போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பு அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

நீதிபதியை கைது செய்த விவகாரம்; மாலைதீவில் மீண்டும் பதற்றம்

(மாலே)

மாலைதீவு நாட்டில் ஜனாதிபதியாக முகமது நஷீத் பதவி வகித்த போது கிரிமினல் நீதிமன்றில் தலைமை நீதிபதி அதுல்லா முகமதுவை கைது செய்ய உத்தரவிட்டார்.

இதனை அடுத்து கடந்த ஜனவரி மாதம் பொலிஸார் திடீர் புரட்சியில் ஈடுபட்டு நஷீத் பதவி இழந்தார். நீதிபதி கைது செய்யப்பட்ட விவகாரம் தற்போது மீண்டும் பிரச்சினையை கிளப்பியுள்ளது. சட்டவிரோதமாக கைது நடவடிக்கை எடுத்ததாக முன்னாள் ஜனாதிபதி நஷீத் மீது நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. அரசு வக்கீல் அகமது முர்ஸ் இந்த வழக்கை தாக்கல் செய்தார்.

இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் நஷீத்துக்கு 3 ஆண்டு ஜெயில் தண்டனை மற்றும் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படலாம். இந்த வழக்கை சந்திக்க தயாராக இருப்பதாக நஷீத் தெரிவித்தார். அவர் கைது செய்யப்படலாம் என கருதி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் தலைநகர் மாலே உட்பட சில இடங்களில் மோதல் ஏற்பட்டது. இதன் எதிரொலியாக மாலைதீவில் மீண்டும் பதற்றம் நிலவுகிறது. (அ-2)

அல்ஜீரியா ஜனாதிபதி அப்டெல்லாஷிஸ் பவுட்டெப்லிகா (இடது) மற்றும் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் லாரண்ட் பேபியஸ் ஆகியோர் அல்ஜீரியா ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து விட்டு வெளியேறுகையில் ....

ஆசாத்தை பதவி விலகக்கோரிய ஆர்ப்பாட்டத்தில் 80 பேர் உயிரிழப்பு

சிரியாவில் அரசு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் 80 பேர் பலியாகினர். சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தை பதவி விலகக் கோரி கிளர்ச்சியாளர்கள் கடந்த ஓராண்டுக்கும் மேலாக போராடி வருகின்றனர். போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவத்துக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் கடுமையான சண்டை நடந்தது.

இதில் 80 பேர் கொல்லப்பட்டனர். டமாஸ்கஸ் நகரின் முக்கிய பகுதிகளில் டாங்குகளும் ஏவுகணைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. கிளர்ச்சியாளர்கள் மீது உலங்கு வானூர்தி மூலம் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகின்றது. இராணுவத்துக்கு எதிராக எரிமலை என்ற போராட்டத்தை நடத்தி வருவதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். தங்கள் மீது இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க அரசு படைகள் முயற்சிப்பதாகவும் போராட்டத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நிலைமை விபரீதமாகச் செல்வதால் சிரியாவுக்கு ஆயுதம் விநியோகம் செய்யும் ரஷ்யாவுடன் ஐ.நா. முன்னாள் பொதுச் செயலர் கோபி அனான் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். மொஸ்கோவில் ஜனாதிபதி புடினை சந்தித்து கோபி அனான் ஆறு அம்ச அமைதித் திட்டத்தை வற்புறுத்தியுள்ளார். (அ-2)

தேர்தலுக்கு முன்பே ஜனாதிபதியானார் பிரணாப் - பாடப்புத்தகத்தில் பெயர்

நாட்டின் 14 ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெற உள்ள நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் செயற்பட்டு வரும் கோண்ட்வானா பல்கலைக்கழகத்தின் பாடப்புத்தகத்தில், பிரணாப் முகர்ஜி, நாட்டின் 14 ஆவது ஜனாதிபதி என்று அச்சிடப்பட்டிருப்பது அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் கட்சிரோலி பகுதியில் இயங்கி வருகிறது கொண்ட்வானா பல்கலைக்கழகம் புதிதாக உருவாக்கப்பட்ட இந்த பல்கலைக்கழகத்தில் நடப்பு கல்வியாண்டின் இளங்கலை அரசியல் அறிவியல் பாடத்தில் ஜனாதிபதிகளின் பட்டியலில், 14 ஆவது ஜனாதிபதி என்று பிரணாப் முகர்ஜியின் பெயர் இடம் பெறவுள்ளது.

கோண்ட்வானா பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் கல்லூரிகளைச் சேர்ந்த 40 ற்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்ட விழாவில் இப்புத்தகம் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் பல்கலைக்கழகம் இது குறித்து எவ்வித கருத்தையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளர், பிரணாப் முகர்ஜியை எதிர்த்து அ.தி.மு.க., பா.ஜ உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவு பெற்று வரும் மற்றும் லோக்சபா முன்னாள் சபாநாயகருமான பி.ஏ. சங்மா களம் காண்கிறார். (அ-2)

மண்டேலா பிறந்த நாளுக்கு இரண்டு கோடி பேர் வாழ்த்து

(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்கத் தலைவர் மண்டேலா நேற்றைய தினம் தனது 94 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். நேற்றைய தினம் அந்நாட்டில் இரண்டு கோடி பேர் அவரது பிறந்த நாள் பாடல் பாடி சாதனை படைத்துள்ளனர்.

தென் னாபிரிக்காவின் விடுதலைக்காக போராட்டம் நடத்தி பல ஆண்டுகள் சிறையில் இருந்தவர் நெல்சன் மண்டேலா. இவரது போராட்டத்தின் பலனாக தென்னாபிரிக்கா ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்றது. தென்னாபிரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த மண்டேலா தற்போது வயோதிப நிலை காரணமாக அனைத்து அரசியல் நடவடிக்கைகளிலிருந்தும் ஒதுங்கிக் கொண்டார்.

அவருக்கு வாழ்த்து பாடல் பாடியதுடன் மற்றவர்களும் சேர்ந்து மொத்தம் இரண்டு கோடி பேர் என்ற அளவில் வாழ்த்து பாடல் பாடி உலக சாதனை வடைத்துள்ளனர்.

தென்னாபிரிக்க மக்களின் சமூக நீதிக்காக அவர் 67 ஆண்டு காலம் உழைத்ததை நினைவு கூறும் வகையில் அவரது ஆதரவாளர்கள் 67 நிமிடங்கள் பொது சேவையாற்ற முடிவு செய்துள்ளனர்.

மண்டேலாவின் பிறந்த தினத்தையொட்டி பல வங்கிகள் 94 கணிப்பான்கள் வழங்குகின்றன. ஜேம்ஸ் டெலானே என்ற ஓவியர் 5 ஆயிரம் தேநீர் கோப்பைகளைக் கொண்டு மண்டேலாவின் உருவத்தை வரைந்துள்ளார். உலகம் முழுவதும் அவரது பிறந்த நாள் கொண்டாடப்பட்டாலும் அவர் எந்த விழாவிலும் பங்கேற்க போவதில்லை என தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுனியா சிறைச்சாலையில் வைத்து தாக்கப்பட்டமை மூலம் நிமலரூபன் படுகொலை செய்யப்பட்டமை, ஏனைய கைதிகள் காயப்பட்டுள்ளமை மற்றும் தொடரும் நிலப்பறிப்பு நடவடிக்கைகள் என்பவற்றுக்கெதிராக நேற்றுக்காலை நெல்லியடி பஸ் நிலையத்திற்கு அருகில் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தின் போது....

பல்வேறு தேவைகளுடன் இயங்கும் மு/வித்தியானந்தக்கல்லூரி

(முல்லைத்தீவு)

மு/வித்தியானந்த கல்லூரி பல தேவைகளின் மத்தியில் இயங்கி வருவதால் மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 1951 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பாடசாலை மீள்குடியேற்றத்தின் பின் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஆயிரத்து 429 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் தரம் 6 தொடக்கம் க.பொ.த். உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்குமான பயிற்றப்பட்ட ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

வகுப்பறைப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இப்பாடசாலையில் உள்ளது.

அத்துடன் இரண்டாம் மொழி சிங்கள பாடம் மற்றும் உடற்கல்வி பாடத்திற்கு பெண் ஆசிரியர் இல்லை.

இப்பாடசாலையானது 1ஏபி பாடசாலையாக இருந்தாலும் விஞ்ஞான ஆய்வு கூட வசதி இல்லை. நூலகம் உள்ள போதும் நூல்களுக்கான பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்கள் கஷ்ட நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பொருளியல், மனைப்பொருளியல், நடனம் ஆகிய பாடங்களுக்கு தனி அறை இன்மையால் மாணவர்கள் பல அவலங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. கணனி வசதிகளும் மாணவர் தொகைக்கு ஏற்றவாறு இல்லை. அதேபோன்று விளையாட்டு உபகரணங்களும் மாணவர்களுக்கு போதுமானதாக இல்லை.

ஆசிரியர் விடுதி இருந்தாலும் சிறிதாக உள்ளமையால் போதியளவு ஆசிரியர்கள் தங்கி நிற்கமுடியாத நிலை உள்ளது.

மாணவர் விடுதியானது போரினால் பாதிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டமையால் நெடுங்கேணி, தண்டுவான், குளவிசுட்டான், ஒட்டுசுட்டான், செம்மலை, குமுழமுனை, ஒதியமலை, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இருந்து விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் உயர்தரத்தில் கல்வி கற்பதற்காக வரும் மாணவர்கள் 10 ஆயிரம் ரூபா கொடுத்து தனியாரின் வீடுகளில் தங்கி நின்று கல்வி கற்க வேண்டியுள்ளது.

வற்றாப்பளை, முள்ளியவளை மேற்கு, குமரபுரம், பொன்நகர், பூதன்வயல், முறிப்பு, நீராவிப்பிட்டி ஆகிய பகுதிகளில் இருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இப் பாடசாலைக்கு 60 இற்கு மேற்பட்ட மாணவர்கள் போக்குவரத்து வசதிகள் இன்மையால் நடந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

மூன்று சிற்றூழியர் தேவைப்படுகின்ற போது ஒரு சிற்றூழியரே கடமையாற்றுகின்றார். மேலும் இப்பாடசாலைக்கு தோட்டம் இருக்கிறபோதும் தோட்டப் பராமரிப்பாளர் இன்மையாலும் பகல் காவலாளி இன்மையாலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பாடசாலைக்கு 75 வீதமான மாணவர்கள் துவிச்சக்கரவண்டியில் வருகின்றனர். ஆயினும் துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் இல்லாமையால் கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது.

இப்பாடசாலையில் மைதான பராமரிப்பாளர் இன்மையும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. எனவே, இத்தனை குறைபாடுகளுடன் இப்பாடசாலை இயங்கினாலும் வருடந்தோறும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவதுடன் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் 65 வீத மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெறுகின்றனர்.

எனவே, வருடந்தோறும் பல கல்விமான்களை உருவாக்கும் இப்பாடசாலையின் குறைபாடுகளை உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுத்து நிவர்த்தி செய்து கல்விச் செயற்பாட்டிற்கு உதவுமாறு மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப எதிர்க்கட்சி செயற்படுகின்றது

சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி எதிர்க்கட்சி என்ற பொறுப்பை நிறைவேற்றி மக்களுக்கு தேவையானவற்றை செய்வதில்லை.

அரசாங்கத்தின் தேவைக்கு அமையவும் அதன் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவும் செயற்பட்டு வருகிறது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சுமத்தியுள்ளார்.

அக்மீமன பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை மற்றும் அரசியல் கொள்கைகளுக்கு அமையவே ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகிறது. இதனால் நாட்டு மக்கள் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி மீது அதிருப்தி கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தின் தவறான பொருளாதார கொள்கை காரணமாக உழைக்கும் பணம் வாழ்க்கை நடத்த போதுமானதாக இல்லை. திடீரென சில பொருட்களின் விலைகளை அரசாங்கம் குறைத்தது. இவை தேர்தலுக்காக அரசாங்கம் வழங்கியுள்ள சலுகைகள்.

இதன்மூலம் தேர்தல் ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளதை அரசாங்கம் வெளிக்காட்டி மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர் என்னும் அவர் கூறியுள்ளார். (அ-2)

புதுக்குடியிருப்பு- சிவநகரில் நாளை மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்த உள்ளதாக முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட புதுக் குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிவநகர் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள குடும்பங்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு மீள்குடியேறக்கூடிய ஆயத்தங்களுடன் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார்.

மேலும் தாங்கள் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராமசேவையாளர் பிரிவில் உள்ள கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் மேல் ஒப்பமிடப்பட்ட விடுவிப்பு கடிதத்தை சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளார். (அ-9)

HDFC
GOLD LOAN
பொற் கடன்

உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து
பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

மேலதிக விபரங்களுக்கு
011 5737373
011 2356800
அல்லது தங்களுக்கு அருகில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK
www.hdfc.lk Email: hdfc@hdfc.lk
Fitch Rating - BBB+(lka)

(சி/555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு தனக்கென்றால்
சுளகு படக்குப்படக்கு எனுமாம்!
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

புத்தரால் பூரணை வென்றது பித்தரால் அமாவாசை தோற்றது

நேற்று ஆடி அமாவாசை விரத நாள். ஆடி அமாவாசை விரதத்தின் தத்துவம் பற்றி ஒரு பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் காலைப் பிரார்த்தனையில் எடுத்தியம்பினார்.

அன்புக்குரிய மாணவர்களே! இன்று (நேற்று) ஆடி அமாவாசை விரத நாள்.

தந்தையை இழந்தவர்கள் அவர் பொருட்டு விரதம் அனுஷ்டிக்கின்ற புனித நாள்.

இந்நாளில் உபவாசம் இருந்து புனித நீர்நிலைகளில் நீராடி, தர்ப்பணம் செய்து, தான தர்மம் கொடுத்து இறந்துபோன தன் தந்தையையும் தந்தை வழி முன்னோர்களையும் நினைவிருத்தி நன்றி தெரிவிக்கும் நாள்தான் ஆடி அமாவாசை விரதம்.

ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற அமாவாசையிலும் விரதம் இருப்பது உத்தமம்.

எனினும் அதனைக் கிரமமாக செய்ய முடியாதவர்கள் வருடத்தில் ஒருமுறை வருகின்ற ஆடி அமாவாசை விரதத்தையேனும் அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறிய ஆசிரியர், இதே போன்று தாயை இழந்தவர்கள் சித்திராபூரணையில் விரதம் அனுஷ்டிப்பார்கள் என்று விளக்கம் கொடுத்தார்.

இவ்வாறு ஆசிரியர் விளக்கம் கொடுக்கும் போது ஒரு மாணவன் எழுந்து சேர்! ஒரு சந்தேகம் என்றான்.

என்ன சந்தேகம்? என்றார் ஆசிரியர்.

சேர்! இறந்துபோன தன் தந்தையை நினைவு படுத்தி வருடத்தில் ஒருமுறை அனுஷ்டிக்கும் விரத நாளில் பாடசாலைகள் இயங்குகின்றன. பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இந்நிலையில் தன் தந்தையை இழந்த மாணவன் ஒருவன் எப்படி இந்த விரதத்தை அனுஷ்டிப்பது. இப்படிக் கேள்வி எழுப்பினான்.

மாணவனின் கேள்வியால் அதிர்ந்துபோன ஆசிரியர் அதில் இருக்கக்கூடிய நியாயங்களையும் புரியாமல் இல்லை.

மாணவனின் கேள்விக்குப் பதிலளிக்க முற்பட்ட அவர் இதுபற்றி எல்லாம் தமிழ் அரசியல் வாதிகள் அரசுடன் கதைத்து ஆடி அமாவாசை விரதத்திற்கு விடுமுறை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல தமிழ் அதிகாரிகளும் பரீட்சைகளை நிறுத்தி ஆடி அமாவாசை விரதத்திற்காக விசேட விடுமுறை வழங்கி பதில் பாடசாலை நடத்த அனுமதிக்க வேண்டும்.

இத்தகைய முடிபுகளை செய்வதன் மூலம் பெற்றோர்களுக்கு நன்றி செலுத்தும் கடமையைச் செய்ய ஊக்குவிக்க முடியும்.

இதன்மூலமே நன்றி உணர்வுள்ள, பாசமுள்ள, கடமை உணர்வுமிக்க மாணவர்கள்-பிள்ளைகளை உருவாக்க முடியும் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட இன்னொரு மாணவன் சேர்! பெற்ற தாயை நினைந்து பூரணையில் விரதம் அனுஷ்டிக்கும்போது அதற்கு விடுமுறை வழங்குகிறார்கள் அல்லவா? அதுபோல ஆடி அமாவாசை விரத நாளிலும் விடுமுறை வழங்கலாமே என்றான்.

ஆம்! இந்த மாணவன் கூறுவது நியாயம் தான். ஆனால் பூரணைக்கான விடுமுறை என்பது சைவமக்கள், தாய்க்கு விரதம் அனுஷ்டிக்கிறார்கள் என்பதற்காக வழங்கவில்லை.

அது புத்தபிரான் ஞானம்பெற்ற நாள் என்பதாலேயே அந்த நாள் விடுமுறை நாளாயிற்று.

இவ்வாறு ஆசிரியர் கூறி முடிக்க, திடீரென எழுந்த மாணவன் ஒருவன் ஓ! புத்தரால் பூரணை வென்றது. எங்கள் பித்தன் சிவனால் அமாவாசை தோற்றது. அப்படித்தானே என்று கூற, மாணவர்களின் சத்தம் அந்த மண்டபத்தை அதிர வைத்தது.

வன்னி, தீவக ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் இடமாற்றம்

வன்னி மற்றும் தீவகப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றி தமது சேவைக்காலங்களைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு நிரந்தர இடமாற்றம் அடுத்த மாதம் முதலாம் திகதி வழங்கப்படும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் அண்மையில் வட மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளருடன் இடம்பெற்ற இடமாற்ற சபைக்கூட்டத்தில் கல்வியியற்கல்லூரிகளில் இருந்து நியமனம் பெறும் ஆசிரியர்கள் வன்னி மற்றும் தீவகப் பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டதும் சேவை நிறைவு பெற்ற 107 ஆசிரியர்கள் 01.08.2012-ல் தாங்கள் கோரிய இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ள முடியும் என முடிபெடுக்கப்பட்டது.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களை தம்மோடு தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுமாறும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஏ)

தமிழக பூசாரிகளால் வழங்கப்படும் இருவார காலப் பூசகர் பயிற்சி

இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தமிழக கிராமக் கோவில் பூசாரிகள் பேரவையைச் சேர்ந்த 3 பூசாரிகளால் இலங்கைப் பூசகர்களுக்கான பயிற்சி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை முல்லைத்தீவு முள்ளியவளை, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ம.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறி தொடர்பான பூரண மாகவிபரங்கள் விண்ணப்பதாரிகளுக்கு கடிதம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து கடிதங்கள் பெறாத பூசகர்களும் பயிற்சி பெற விரும்பும் பூசகர்களும் 0112552641,0112552642 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

முழுமையாக வதிவிடப் பயிற்சியாக அமையவுள்ள இப்பயிற்சி நெறியில் பூசகர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள், ஆலயங்களின் அனுட்டான விதி முறைகள், அர்ச்சனை முறைகள், கிரியைகள் தொடர்பான விளக்கங்கள், முறையான மந்திர உச்சாடனங்கள், பிராணாத்தனை, தியானப் பயிற்சிகள், எளிய முறை யோகாசனப் பயிற்சிகள், திருமுறை பஜனைப் பாடல்கள் போன்ற இந்து ஆலயங்களிற் பேணப்படவேண்டிய அடிப்படை கிரியை மற்றும் அனுட்டானங்கள் தொடர்பான விரிவுரைகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

செம்மணி இந்துமயான சுற்றுமதில் திறப்புவிழா

செம்மணி இந்து மயானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுற்றுமதில் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் லயன் சி.இலட்சமிகாந் தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், வலி.கிழக்கு பிரதேசசபைத் தலைவர் அ.உதயகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் எனசெம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளது. (அ-9)

சத்திய தரிசனம்

கடவுளை மறப்பது என்பது உங்களையே மறப்பது போன்றதாகும். பண்டைய நாட்களில் மக்கள் 110 அல்லது 120 வருடங்கள் வாழ்ந்தனர். ஏனெனில் அவர்கள் விடாமல் இறைவனைப் பற்றிய சிந்தனையிலே இருந்தனர். அவர்களை எவ்வித நோயும் அணுகவில்லை. அவர்கள் சாத்வீகமான சாதாரண உணவு உண்டனர். அவர்களுக்கு விற்றமின்களையும் புரோட்டினையும் பற்றித் தெரியாது. விற்றமின் மாத்திரைகளும் சாப்பிடுவதில்லை. ஆனால் அவர்களுக்குத் தேவையான விற்றமின்கள் கிடைத்தன. ஏனெனில் அவர்கள் தங்கள் உணவினை இறைவனுக்கு முதலில் நிவேதனமாக அர்ப்பணித்துவிட்ட பிறகே பிரசாதமாக ஏற்றுக் கொண்டனர்.

இரத்தவங்கியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் தாரணி அறிவித்துள்ளார்.

மேற்படி வங்கியில் பி பொசிற்றிவ், ஓ பொசிற்றிவ் ஆகிய இரு குருதி வகைகளுக்குமே மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் இரத்த வங்கிக்கு விரைந்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு அவர் கேட்டுள்ளார்.

ஏற்கெனவே குருதியை வழங்கி 4 மாதங்கள் கடந்துள்ள நிலையிலேயே இவ் இரத்ததானத்தை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)

மகாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி பயிலும் மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கான இவ்வாண்டு மே, யூன் மாதங்களுக்கான பணம் கிடைக்கப் பெற்றுள்ளதாக நிறுவனக் கணக்காளர் கே.ராஜேஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே உரிய மாணவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குச் சமுகமளித்து நிதிக் கிளையில் உள்ள மேற்படி ஆவணங்களில் கையொப்பம் இடுமாறும் தவறும் பட்சத்தில் நிதி திருப்பி அனுப்பப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)

விபுலானந்தர் நினைவும் முத்தமிழ் விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சுவாமி விபுலானந்தர் நினைவு தினமும் முத்தமிழ் விழாவும்-2012 இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி வாகீசர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் சி.சிவநேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கலர்சாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கல்லூரி மாணவர்களின் பேச்சு, நடனம், தாளலயம், தனியிசை, தனிநடிப்பு, விலிசை, நாடகம், குழு இசை, சொல்லாடல்களம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (அ-9)

அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

ஆடிமாதம் திருமணம் நடத்தலாமா?

பொதுவாக ஆடி மாதம் திருமணம் நடத்துவதில்லை. எந்தச் சூழ்நிலையிலும் ஆடிமாதம் திருமணம் செய்வது முன்னோர்கள் ஆமோதிப்பதில்லை.

தமிழ்மாதங்களில் நான்காவது மாதமான ஆடிமாதத்தை இராசியில்லாத மாதமாகவே கருதி வந்தனர். இதிலிருந்து ஏதோ ஒரு விடயம் இதன் பின்னால் உள்ளதை உணரலாம்.

ஆடிமாதத்துக்குப் பின் வரும் ஆவணிமாதம் நிலவின் குளிமை நிறைந்த மாதம் என்றும் அதனால் ஆவணியிலே திருமணம் செய்யலாம் என்று சொல்வது வழக்கம். திருமணம் என்ன, எந்த முக்கிய சடங்குகளும் ஆடிமாதம் நிகழ்வதைத் தவிர்த்து வருகின்றோம்.

ஆடிமாதக்கஞ்சி என்ற நம்பிக்கையும் சில மக்கள் ஆசாரித்து வருகின்றனர். சில மருந்து மூலிகைகள் கலந்து கஞ்சி குடிப்பதே ஆசாரம். இதை அந்த மருந்துக்கள் பெயர் சொல்லிக் குறிப்பிடாமல் மாதத்தின் பெயரிலேயே குறிப்பிடுகின்றனர்.

திருமணம் என்பது மனதாலும் உடலாலும் மிகவும் அல்லல்கள் எதிர்கொள்ளவேண்டிய வைபவம். அதனால் இதற்கு மிகவும் கவனம் தேவை. ஆடிமாதம் பொதுவாக உடல் நலத்துக்கு உகந்த மாதம் அல்ல. இயற்கை உடல் நலத்துக்குப் பிரதிகூலமானதாக இருக்கும். அதனால் உடல் நலத்தில் மிகவும் கவனம் செலுத்தவேண்டிய மாதம் இது. இந்தக் காரணத்தாலேயே ஆடிமாதம் திருமணம் போன்ற சடங்குகள் நிகழ்வதில் தடை விதிக்கப்பட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 229 ஓட்டங்களால் அபார வெற்றி

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 229 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் பெரியபுலம் மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி A அணியினர் 47.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 329 ஓட்டங்களை குவித்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் அதிகபட்சமாக ஆர்.பிரிசங்கர் 38 பந்துகளுக்கு முகம் கொடுத்து 73 ஓட்டங்களையும் எம்.கௌரகன் 84 பந்துகளுக்கு முகம்கொடுத்து 62 ஓட்டங்களையும் எ.கானமிர்தன் 59 பந்துகளுக்கு முகம்கொடுத்து 48 ஓட்டங்களையும் ஞா.ஆபிரகாம் அனோஜன் 25 பந்துகளுக்கு முகம்கொடுத்து 33 ஓட்டங்களையும் எஸ்.மிதர்சன் 19 பந்துகளுக்கு முகம்கொடுத்து 23 ஓட்டங்களையும் பி.துவாரகசீலன் 07 பந்துகளுக்கு முகம்கொடுத்து 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பெரியபுலம் மகா வித்தியாலய அணி சார்பாக பந்து வீச்சில் பிரசாந் 10 ஓவர்கள் பந்து வீசி 78 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டினையும் சுதர்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 50 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் சீருதன் 7 ஓவர்கள் பந்து வீசி 51 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டினை கைப்பற்றினர்.

330 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற மாபெரும் இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் மகா வித்தியாலய அணி 17.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 100 ஓட்டத்தினை மாத்திரம் எடுத்து 229 ஓட்டங்களால் தோல்வியை தழுவிக் கொண்டது.பெரியபுலம் மகா வித்தியாலய அணி சார்பாக அதிகபட்சமாக சுதர்சன் 45 பந்துகளுக்கு முகம்கொடுத்து 45 ஓட்டத்தினையும் சீருதன் 17 பந்துகளுக்கு முகம் கொடுத்து 13 ஓட்டத்தினையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக எஸ்.சிந்துஜன் 4.1 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டினையும் எ.கிளிறன்ஸ் 4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டம் அற்ற ஓவர்கள் உட்பட 13 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் எ.சுவிந்திதன் 4 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

தேசிய மட்ட வலைப்பந்தாட்டத்தில் யூனியன் கல்லூரி இரண்டாமிடம்

(வேலணை)

மக்கள் வங்கி அனுசரணையுடன் இலங்கை வலைப்பந்தாட்ட சங்கம் நடத்திய தேசிய மட்ட வலைப்பந்தாட்டம் கண்டி நாவலப்பிட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த மகளிர் வலைப்பந்தாட்டப் போட்டியில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 21 மகளிர் வலைப்பந்தாட்ட அணிகள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்காக யூனியன் கல்லூரி தெரிவு செய்யப்பட்டு இத்தொடரில் பங்கு பற்றியது. யூனியன் கல்லூரி அணி முதல் சுற்றுப் போட்டியில் இலங்கை தேசிய இளைஞர் சபை வலைப்பந்தாட்ட அணியை எதிர்கொண்டு 16:12 என்ற புள்ளியடிப்படையில் வெற்றி பெற்றது. 2 ஆம் சுற்றில் கொழும்பு மாவட்ட அணியை எதிர்கொண்டு 13:4 என்ற புள்ளியடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. காலிறுதியில் கண்டி மாவட்ட அணியை எதிர்கொண்ட யூனியன் 17:12 என்ற புள்ளியடிப்படையிலும் அரையிறுதியில் அநுராதபுர மாவட்டத்தோடு 23:11 என்ற புள்ளியடிப்படையிலும் அமோக வெற்றியைப் பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது. பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை தேசிய பாடசாலைகள் அணியிடம் 24:11 என்ற புள்ளியடிப்படையில் தோல்வியடைந்து தேசிய மட்ட வலைப்பந்தாட்டத்தில் யூனியன் கல்லூரியின் 21 வயது பெண்கள் அணி இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

வடமாகாண அரச சேவை மென்பந்து கிரிக்கெட் போட்டி

(வேலணை)

இலங்கை அரச சேவை முதன் முறை

விளையாட்டுச்சங்கம் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய வடமாகாண அரசசேவை மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4,5 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர தலைமையில் அரச திணைக்களங்களுக்கிடையில் வவுனியா அரச சேவை விளையாட்டுச் சங்கத்தினால் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.இம்மாவட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.இப்போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற அரச திணைக்கள அணிகள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக கிரிக்கெட் போட்டி, செயலாளர், மாவட்ட செயலகம், வவுனியா என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கிரிக்கெட் போட்டி செயலாளரால் கோரப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை அறிவதற்கு 024-2222233, 024-2222234 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுச் செய்திகள்....

சைக்கிள் ஓட்டப் போட்டி

புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு பொன்விழாவினை முன்னிட்டு எதிர் வரும் 26 ஆம் திகதி அன்று அச்சுவேலி பொலிஸ் பிரிவின் ஆதரவுடன் புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டு கழகம் நடத்தும் ஆண்களுக்கான அறுபது கிலோ மீற்றர் தூர சைக்கிள் ஓட்டப் போட்டியும் ஆண்களுக்கான பதினைந்து கிலோ மீற்றர் தூர மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன.

புத்தூர் கருகப்பை ஈஸ்வரன் ஆலய முன்றலிலிருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் இப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் பதிவுக் கட்டங்களின்றி 0775256360 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டும் முதலாவது வீரருக்கு புத்தம் புதிய டுமாலா சைக்கிள் வழங்கப்படுவதோடு ஏனைய பத்து வீரர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 2012 ஆம் ஆண்டுக்கான பெருவிளையாட்டுக்களில் 19 வயது ஆண்களுக்கான எல்லே போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்ற யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியினரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையுடனான ஒப்பந்தத்திற்கு இலங்கை வீரர்கள் சம்மதம்

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் சபையால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை வீரர்கள் சம்மதித்துள்ளனர்.

இதன்படி கடந்த 5 மாதங்களாக கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்குமிடையில் ஒப்பந்தம் தொடர்பாக இடம்பெற்று வந்த இழுபறி நிலை முடிவுக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் மார்ச் முதலாம் திகதி முதல் 2013 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வரை கைச்சாத்திடப்படவுள்ளது. அத்தோடு இதுவரை இலங்கைக் கிரிக்கெட் சபை இலங்கை வீரர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள நிலுவைகள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற எஸ்.எல்.பி.எல் அறிமுக விழாவில் கலந்து கொண்ட இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவரும், வயம்ப யுனைட்டட் அணியின் தலைவருமான மஹேல ஜெயவர்த்தன, இலங்கைக் கிரிக்கெட் சபை தங்களுக்குரிய தேசிய ஒப்பந்தத்தை வழங்காவிடில் எஸ்.எல்.பி.எல் போட்டிகளில் தங்களால் பங்கு பூற்ற முடியாது என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே மறுநாளே ஒப்பந்தத்திற்குரிய சமரசம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து நேற்றுக் கருத்து தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, வீரர்களுக்குரிய ஒப்பந்தங்கள் இன்று அல்லது நாளை கைச்சாத்திடப்படும் எனத் தெரிவித்தார். ஒப்பந்தம் இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய அணியுடன் நாளை மறுதினம் போட்டி ஆரம்பமாக முன்னதாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என நிஷாந்த ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கைக்கு எதிரான தொடரில் சாதிக்க, சென்னையில் பயிற்சியில் ஈடுபட்ட இந்திய அணியின் கோஹ்லி.

வருமானத்தில் பங்கு கேட்கிறது பாகிஸ்தான்

இந்தியா – பாகிஸ்தான் இடையே டிசம்பர் மாதம் நடைபெற உள்ள கிரிக்கெட் போட்டியில் வரும் வருமானத்தில் தங்களுக்கும் பங்கு அளிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

இந்த போட்டியினால் எங்களுக்கு எந்த லாபமும் கிடைக்கப் போவதில்லை. எனவே, இப்போட்டியின் மூலம் வரும் வருமானத்தில் தங்களுக்கு பங்களிக்க வேண்டும் என்று பிசிசிஜயுடன் நடைபெற உள்ள கூட்டத்தில் கோர உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கைப் பயணம் இருபது-20 உலகக் கோப்பைக்கு ஊக்கமளிக்கும்

தோனி கருத்து

தோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டியில் விளையாட இருக்கின்றது.

இந்திய - இலங்கை அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது.

ஓகஸ்ட் 4 -ம் திகதி வரை இந்த ஒருநாள் போட்டிகள் நடைபெறுகின்றது. இதைத் தொடர்ந்து ஒரே ஒரு இருபது-20 போட்டி ஓகஸ்ட் 7 ஆம் திகதி நடைபெறும்.

இத் தொடருக்காக இந்திய வீரர்கள் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் 2 நாட்களாக பயிற்சியில் ஈடுபட்டனர். பயிற்சியின் நிறைவு நாளான நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தோனி தெரிவித்துள்ளதாவது,

தற்போது புதிய சீசனில் அடியெடுத்து வைக்கும் இந்திய அணி, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் சிறப்பான பங்களிப்பினை ஆற்ற வேண்டும்.

தற்போது நடைபெறவுள்ள இலங்கைக்கு எதிரான தொடர், செப்ரெம்பர்- ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள இருபது-20 உலகக் கிண்ண போட்டித் தொடருக்கு நம்பிக்கையை அதிகரிக்கும் உந்துசக்தியாக இருக்கும்.

இப்போட்டிகள் அனைத்தும் பரபரப்பாக இருக்கும். ஆனால் நமது நிலையில் நாம் தொடர்ந்து சிறப்பாக ஆட வேண்டும். பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்து பல்வேறுபட்ட ஆடுகளங்களில் விளையாட வேண்டும். எனவே இந்த சீசனை வெற்றியுடன் தொடங்க வேண்டும்.



இலங்கை எமக்கு புதிய இடம் இல்லை. ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் அங்கு விளையாடியிருக்கின்றோம். பருவநிலையும் இந்தியாவை விட வேறுபடவில்லை. இந்தியாவுக்குத் தான், வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது.

பந்துவீச்சாளர்கள் எப்படி பந்து வீசுகிறார்கள்?

துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் ஜோடிகளுடன் எவ்வாறு நிலைத்து நின்று ஆடுகிறார்கள் என்பதுதான் மிகவும் முக்கியம். இவை இல்லாமல் ஒரு அணி வெற்றி பெறுவது கடினம்.

இந்திய அணி ஒருநாள், டெஸ்ட் மற்றும் இருபது-20 போட்டி என மூன்று துறைகளிலும் முன்னேற கடுமையாக உழைத்து வருகின்றது. ஆனாலும் அடுத்து வர உள்ள இருபது-20 உலகக்கிண்ணம் மிகவும் முக்கியம்.

கடந்த சீசனில் நடைபெற்ற போட்டிகள் இந்திய அணிக்கு கடினமான நேரம் என்று பயிற்சியாளர் பிளெட்சர் கூறியிருந்தார்.

ஆனால் இந்த ஆண்டு பழைய நிலைக்கு இந்திய அணி திரும்பும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். இவ்வாறு தோனி தெரிவித்துள்ளார்.

ஆஷஸை விட இந்திய-பாக். போட்டி பெரியது -அப்ரிடி

(லாகூர்)

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெறும் சரித்திரப் புகழ் பெற்ற ஆஷஸ் தொடரை விட இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிகள் பெரியவை என பாகிஸ்தான் அணியின் அதிரடிச் சகலதுறை வீரர் சஹிட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டு, எதிர்வரும் டிசம்பர் மாத முடிவில் பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இந்திய கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்துள்ள நிலையிலேயே சஹிட் அப்ரிடி இக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் உறவை மேம்படுத்த இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளும் மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டிய சஹிட் அப்ரிடி, இது சிறப்பான முன்னேற்றம் எனவும் குறிப்பிட்டார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிகள் பரவலாகப் பின் தொடரப்படும் போட்டிகளாகக் காணப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், இந்திய, பாகிஸ்தான் நாட்டவர்கள் மாத்திரமன்றி உலகம் முழுவதிலுமுள்ள மக்களால் இரசிக்கப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு எதிராகப் போட்டிகளில் பங்குபற்றும்போது அதிகபட்ச அழுத்தங்கள் காணப்படுவதாகத் தெரிவித்த சஹிட் அப்ரிடி, ஆனால் அதையும் தாண்டி அப்போட்டிகள் மிகுந்த பரபரப்பையும், கிளர்ச்சியையும் ஊட்டக்கூடியன எனத் தெரிவித்தார்.

ஐ.பி.எல் விழாவில் ஆபாச நடனம் நடிகைகளுக்கு அழைப்பாணை

ஐ.பி.எல் சீசன் 5-வது தொடக்க விழா சென்னையில் ஏப்ரல் 3-ம் திகதி நடைபெற்றது. இந்த தொடக்க விழாவில் ஆபாச நடனங்கள் அரங்கேறியதாக வழக்கறிஞர் ஜெபக்குமார் என்பவர் இந்திய உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுத் தாக்கல் தொடர்ந்தார்.

இது தொடர்பான வழக்கு உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்குத் தொடர்பாக பி.சி.சி.ஐ தலைவர் சீனிவாசன், ஐ.பி.எல் தலைவர் ராஜீவ் சுக்லா, நடிகர்கள் அமிதாப்பச்சன், சல்மான் கான், நடிகைகள் பிரியங்கா சோப்ரா, கரீனா கபூர், அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பொலிஞ்சர் உட்பட 12 பேருக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி செல்வம் உத்தரவிட்டார். அடுத்த கட்ட விசாரணையை யூலை 31 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

கிரிக்கெட் சுற்றுத் தொடருக்காக இந்திய அணி நேற்று இலங்கையை வந்தடைந்தது. இவ்வாறு வந்தடைந்த வீரர்களை முதல் படங்களிலும், இலங்கை -இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் சுற்றுப் போட்டி தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சுற்றுப் போட்டிக்கான சம்பியன் கிண்ணத்துடன் இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன, இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் தோனி ஆகியோர் காணப்படுவதை அடுத்த படத்திலும் காணலாம். இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான ஒருநாள் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐக்கியமாகவுள்ள ஐ.தே. கட்சி

சஜித் நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தானும் ஒரே மனப்பாங்கிலேயே இருப்பதாகவும் எதிர்வரும் தேர்தல்களில் கட்சியின் வெற்றிக்காக செயற்படுவதாகவும் ஐ.தே.க பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயற்பாட்டு அங்கத்தவர் ஒருவர் என்ற வகையில், தேர்தல் வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கைகளில் நான் ஈடுபட்டுள்ளேன். ஐ.தே.கவுடன் இணைந்து செயற்படுவதுடன் அதன் அங்கத்தவர்கள் வெற்றிக்காக ஐக்கிய மாகச் செயற்பட்டுள்ளனர். இது குறித்த கேள்விக்கு இடமில்லை என சஜித் பிரேமதாஸ கூறினார்.

அதேவேளை, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஐ.தே.கவில் இணைந்தால் அவருக்கு தான் முழுமையான ஆதர வளிப்பதாகவும் தெரிவித்தார். ஐ.தே.கவில் பொன்சேகா இணைந்தால் அவருக்கு தனிப் பட்ட ரீதியில் நான் மிக மகிழ்ச்சியடைவேன்.

அவருக்கு எனது ஆசிர்வாதமும் முழு மையான ஆதரவும் இருக்கும். அவர் எம் முடன் கைகோர்ப்பார் என்பதில் எவ்வித சந் தேகமும் இல்லை. அவர் எம்முடன் இணை வதற்கு எவ்வித நிபந்தனைகளும் தேவை யில்லை என அவர் கூறினார்.

அதேவேளை, சிவில் பாதுகாப்பு படை யினர் முறையான வசதிகள் இன்மையால் சிரமப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த உத்தியோகஸ்தர்கள், நிரந்தர அடிப்படையில் பணியிலமர்த்தப்படவில்லை. சொற்பளவான நாளாந்த சம்பளம் அவர் களுக்கு வழங்கப்படுகின்றது. கிராமங்களை சிவில் பாதுகாப்பு படையினர் பாதுகாத்ததால் புலிகளுடன் முன்னரங்க நிலைகளில் இராணு வத்தினர் போரிட முடிந்தது.

நாட்டை இவ்வாறு பாதுகாத்தவர்கள் சொற் பளவான நாளாந்த சம்பளத்தில் பண்ணை களிலும்தொழிற்சாலைகளிலும்பணியாற்றுவது கவலைக்குரியது எனஅவர் கூறினார். (ஏ-11)

வடமராட்சி...

இடத்துக்கு மக்கள் செல்வதற்கும் தடைவிதித் தனர்.

நெல்லியடி பிரதேசம் முழுவதும் நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் ஆங்காங்கே காணப்பட்டதால் மக்களிடையே பதற்றம் மான நிலையே காணப்பட்டது. (ஏ-11,24)

தமிழ்த் தேசி...

ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன்தொடர் புடைய அரசியல் கட்சிகள் ஏனைய கட்சி வேட் பாளர்களை அச்சுறுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். ஆரம்பத்திலேயே இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்படும் நிலைமை ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்க ளப்பு மாவட்ட வேட்பாளர் கே.துரைராஜசிங் கத்தின்வீட்டை இனந்தெரியாதநபர்கள்வெளியே பூட்டிச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் குறித்த கதவு உடைக்கப்பட்டதாக சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ஏ-11)

நிமலரூப...

நாளை 20ஆம் திகதி வழங்கப்படும் என நீதி மன்றம் அறிவித்துள்ளது.

றாகம வைத்தியசாலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி கணேசன் நிமலரூ பனின் சடலம் தொடர்பில் அவரது பெற்றோரின் கோரிக்கையினை நீதிபதி கரிசனையுடனும், அக்கறையுடனும் செவிமடுத்ததாகவும், தமக்கு சாதகமான முறையில் தீர்ப்பு வழங்கப்படும் எனவும் நிமலரூபனின் பெற்றோருடன் நீதி மன்றிற்கு சென்றிருந்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார். (ஏ-11)

சரியான...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித் தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பீடம் ஏமாற்றப்படாது புத்திசாலித்தனமான முடிவை எடுத்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின் றோம்.

தமிழ் பேசும் இனத்தின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டும் வடக்கு கிழக்கின் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்திற்கும் இந்த முடிவு சிறப்பானதொன்றாக அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

தமிழ் பேசும் மக்களை மதிக்காத அவர் களது உணர்வுகளை புரிந்துகொள்ளாத அரசாங்கத்திற்கு துணை போகாமல் இருப்ப தென்று முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த முடிவை நாங்கள் மிகவும் வரவேற்கிறோம் என்று மேலும் தெரிவித்துள்ளார். (ஏ-11)

SLAS WORKSHOP

எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ள SLAS மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான முழுநாள் வேலைக்களப் பயிற்சியொன்று 20.07.2012 வெள்ளிக்கிழமை கொழும்பில் கோப்பாய் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

(C-560)

பதிவுகளுக்கும் மேலதிக தகவல்களுக்கும் : 0783619545

Email : kopayedu@gmail.com

யாழ் நகரில் வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு - 0779906299

இடையூறு இன்றி சடங்...

அடக்கம் செய்வதற்காக வவுனியாவுக்கு எடுத்துச் செல்வதற்காக தாக்கல் செய்துள்ள விண்ணப்பம், உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் ஷிராணி ஏ.பண்டாரநாயக்க, நீதி யரசர்கள் பீ.ஏ.ரட்ணாநாயக்க, சந்திரா ஏக்க நாயக்க முன்னிலையில் நேற்று விசார ணைக்கு வந்தபோதே, இந்த உறுதிமொழி கோரப்பட்டது.

பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பொலிஸ் அதிகாரப்பீடத்தின் அறிவுறுத்தல்களை பெறுவதற்கு சட்டமா அதிபர் சார்பில் தோன் றிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கால அவ காசம் கோரினார். இதைத் தொடர்ந்து இவ் விசாரணை ஜூலை 20-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மீப்பு நடவடிக்கை எனக் கூறப்பட்ட நடவடிக் கையொன்றின்போது இராணுவத்தினாலும் விசேட அதிரடிப்படையினராலும் மூர்க்கத்த னமாக வவுனியா சிறையில் தாக்கப்பட்டதாக கூறப்படும் 31 தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரான நிமலரூபன், ராகம வைத்திய சாலையில் காயங்களுக்காக அனுமதிக் கப்பட்டு மரணமானதாக கூறப்பட்டுள் ளது.

நிமலரூபனின் உடலை ராகம பகுதியில் புதைக்க வேண்டுமென மஹர நீதவான் கட்டளையிட்டிருந்தார். (ஏ-11)

பொலிஸ் பாதுகாப்புடன்...

வடமராட்சி நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத் தில் பல நூற்றுக்கணக்கான மக்கள், அரசி யல் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்என பலரும் கலந்துகொண்டுதமது நியாயக் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் வவுனியா சிறைச்சாலையில் தாக்கப்பட்டு பின் படுகொலை செய்யப்பட்ட நிமலரூ பனின் கொலையைக் கண்டித்தும் ஏனைய அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும், நில அபகரிப்பை நிறுத்தக் கோரி யும் அமைதியான முறையில் இவ் ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள் தமது சுலோக அட்டைகளில் "ஒடுக்காதே தமிழ் மக்களை ஒடுக்காதே" "கருணா, பிள்ளை யான், கே.பிக்கு ராச வாழ்க்கை அப்பாவி நிமலரூபனுக்கு படுகொலையா?", "அரசியல் கைதிகள் மற்றும் போர்க்கைதிகளை விடு தலை செய்", "முள்ளிவாய்க்கால் முடிபல்ல. வவுனியா சிறையும் முடிபல்ல", "தாக்காதே எமது இளைஞர்களைத் தாக் காதே", "நீதிவேண்டும் நீதி வேண்டும் நிம லரூபனின் படுகொலைக்கு நீதி வேண்டும்", "சிறைக் கூடங் கள் இங்கே கொலைக்களம் இதுதான் சிறி லங்காவின் ஜனநாயகம்", "நிலங்களைப் பறிக் காதே வளங்களைக் கொள்ளையடிக்காதே" போன்ற பதாகை களை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுப ட்டனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இப் போராட்டத்தில் நெல்லியடி நகருக்கு மக் களை பயணிக்க விடாது இராணுவத்தினர் அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இராணுவத்தினரின் அச் சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் நீதிமன்ற உத்தரவுக்கமைய இவ் ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸார் பாதுகாப் பும் வழங்கியிருந்தனர். (ஏ-3,24)

கிழக்குத் தேர்தலில்...

கடந்த சில தினங்களாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நெருக்கடி யிலிருந்தார்.

கிழக்கில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 12ஆணங்களை ஒதுக்கித்தர முடிவு செய்த ஜக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைச்சர்களான அலாவுல்லா தேசிய காங்கிரஸ் ரிசாத் பதியூதின் (அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்) ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி இரவு அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்து சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸுக்கான ஆசனம் 11ஆக குறைக்கப்பட்டது.

இதனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் நெருக்கடியில் விழுந்தது.

எனினும் இது குறித்து நேற்று ஜனாதிப தியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றி யளிக்காததையடுத்து கிழக்கு மாகாணத்தில் தனியாக மரச்சின்னத்தில் போட்டியிட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்தது. (ஏ-11)

நீதிமன்றங்கள்...

மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் நீதிவானுக்கு எதிராக கோசம் எழுப்பியதுடன் நீதவான் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் மீது கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண் டுள்ளதாகவும், பொலிஸாரை நோக்கி கல்லால் தாக்குதல் நடத்தி யுள்ளதாகவும் இதனால் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் காய மடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டகாரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டதுடன் கலகம்விளை வித்த குற்றச்சாட்டின் பேரில் 8 பேரை கைது செய்துள்ளதாகவும் ஊடகப் பேச் சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மன்னார் உப்புக்குளம், கோந்தைப்பிட்டி இறங்கு துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுடைய வாடிகளை கடந்த வெள்ளிக்கிழமை மாலை அடித்து உடைத்து சேதப்படுத்திய சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ-11)

மறந்தது...

முறை சுற்றிவிட்டு அங்கிருந்த வயோதிபர் ஒருவரை மோதிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இச்செயற்பாட்டை அங்கு கடமையிலிருந்த நூற்றுக் கணக்கான பொலிஸாரும் இராணு வத்தினரும் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந் நிலையில் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் குழப்பிய நிலையில் காணப் பட்டனர். (ஏ-3,10,24)

படிவம் விற்பனையாகிறது

வடக்கு மாகாண பொதுச்சேவைகளின் பதவிகளுக்கு

ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012

01. கால்நடை உற்பத்தி சுகாதாரத் தினைக்கள கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2012

02. கால்நடை உற்பத்தி சுகாதாரத் தினைக்கள கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2012

03. .....

(C-566)

ஸ்ரீ கரன் புக் சென்டர்

நே.கே.எஸ் வீதி, சுன்னாகம். புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

சர்வதேச விசா விற்பனர்கள் பங்குபற்றும் திசைகாட்டியின் இலவச விசா விழிப்புணர்வுக் கருத்தரங்கு

நியூசிலாந்து, மலேசியா, கனடா, அவுஸ்திரேலியா நாடுகளுக்குரிய குடும்ப மற்றும் Student விசாக்களுக்குரிய சட்டரீதியான வழிகாட்டல்கள்

பன்னாட்டு விசாக்களின் சட்டரீதியான அணுகு முறைகள் பற்றி எம்மவர்களுக்கு விளக்குவதற்காக, உங்கள் முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம் இதனை சமூகப் பொறுப்போடு ஒழுங்கமைத்துள்ளது.

காலம் : 22.07.2012 ஞாயிறு மு.ப. 10 மணி

இடம் : Tilko Hotel கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

சட்ட ரீதியான விசா ஆலோசனைகள்,

விளக்கங்கள், வழிகாட்டல்கள், திசைகாட்டல்கள்.

பிரவேசம் மற்றிலும் இலவசம்

பின்வரும் தொலைபேசி இலக்கம் மூலம் 21.07.2012 நண்பகல் 12 மணிக்கு முன் முற்பதிவு செய்தல் அவசியம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிலையம்

இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை,

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. : 021 221 9016

(C-568)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org